உ
முருகா

திருமயிலைத் திருப்புகழ்

(உரையுடன்)

ஸ்ரீ கபாலீச்சுவரர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை.

1959.

உ

முருகா

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

திருமயிலைத் திருப்புகழ்

(பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரையுடன்)

உரை ஆசிரியர் :

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்.

திருமயிலைத் திருக்கபாலீசுவரர் தேவஸ்தான வெளியீடு.

விகாரி—கார்த்திகை—27

கார்த்திகை விளக்கீடு

13—12—1959.

விலை. 0-40 ந.பை.

திருப்புகழமிர்தம் அச்சகம்,
89, சிங்கண்ணசெட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

சென்னை மாநில இந்து அறநிலைய பாதுகாப்புத்துறை அமைச்சர்,
நல்லறங் காவலர்

உயர்திரு. எம். பக்தவத்சலம், B. A. B. L.

அவர்கள் அளித்த

வாழ்த்துரை

திருமயிலை ஸ்ரீ கபாலீஸ்வரர் ஆலயம் தேவாரப் பாடல் பெற்ற சிறப்புவாய்ந்தஸ்தலம். அதன்சிறப்பு அடியார்களும், தர்மகர்த்தர்களும் காட்டுகின்ற அக்கறையின் காரணமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறது. ஸ்ரீ அருணகிரிநாதரும் இந்தத் திருக்கோயிலில் தரிசனம் அளிக்கின்ற முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். திருமயிலைக்கு விசேஷ சிறப்பளிக்கும் மயிலைத் திருப்புகழ் பற்றி எத்தனை மயிலைவாசிகள் கேள்விப்பட்டிருப்பார்கள். ஸ்ரீ முருகப்பெருமானின் அருளைப் பெற்ற அடியார் திருமுருக. கிருபானந்தவாரியார் அருளிச் செய்த விரிவுரையோடு வெளிவருகின்ற இந்தத் திருமயிலைத் திருப்புகழை யாவரும் வரவேற்று அனுபவிப்பார்கள். இதை ஏற்பாடு செய்த தர்மகர்த்தர்களை நான் வாழ்த்துகிறேன்.

எம். பக்தவத்சலம்.

11—12—59

உ

முருகா

முன்னுரை

தொண்டைநாட்டுத் திருப்பதியாகிய திருமயிலை மிகப் பழைய சிவத்தலம். திருஞான சம்பந்தப் பெருமான் என்பைப் பெண்ணாக்கிய புண்ணியப் பெரும்பதி. நாள் தோறும் பூசைகளும் திங்கள்தோறும் விழாக்களும் சிறப்பாக நடந்து வந்த நகரம். இப்போது திருவல்லிக்கேணி யென்று தனியாக உள்ள பகுதி முன்பு திருமயிலையின் ஒரு பகுதியாகவே இருந்தது. அதனால் ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானைப் பாடிய ஆழ்வார், "மயிலைத் திருவல்லிக்கேணி கண்டேனே" என்று பாடினார்.

இத்தகைய சிறப்புடைய தலத்தில் ஸ்ரீ கபாலீசுவரர் எழுந்தருளி யிருக்கிறார். ஸ்ரீ கற்பகாம்பிகை அருள் கொழிக்கும் கோலத்துடன் விளங்குகிறாள். முருகப்பெருமான் சிங்கார வேலன் என்ற திருநாமத்தோடு எழுந்தருளி யிருக்கிறான். தேவாரத்தால் இத்தலம் பெருமை பெற்றதோடு, அருணகிரிநாத முனிபுங்கவர் அருளிய திருப்புகழாலும் இது மேலும் சிறப்படைந்திருக்கிறது. தேவாரத்தில் ஒரு திருப்பதிகம் இருக்கிறது. திருப்புகழும் ஒரு பத்தாக அமைந்திருக்கிறது.

அருணகிரிநாதப் பெருமான் அற்புதத் திருவாக்கில் பல அரிய பொருள்கள் செறிந்திருக்கின்றன; மயிலையம் பதியைப் பல பாடல்களில் நகர் என்றே சொல்கிறார். "இயலின் இயல் மயிலை நகரில் இனிதுறையும் எமது பர"

என்றும், "மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே" என்றும், "மயிலைநகர் வாழவந்த பெருமாளே" என்றும், "மயிலைநகர் மேவு முக்ர துரகத கலாப பச்சை மயில்வீரா" என்றும் பாடுகிறார். இது கடற்கரையில் இலங்குவ தென்பதை, "கடலக்கரை திரை யருகேசூழ் மயிலைப்பதி" என்று குறிப்பிடுகிறார், இது அழகு மிக்க பதி என்பதை 'அழகாகிய மயிலாபுரி" என்று புலப்படுத்துகிறார். அந்த அழகுக்கு இயற்கை வளமும் செயற்கை வளமும் இங்கே அமைந்திருப்பதே காரணம். "குலநறை மலரளி சூழ்ந்துலாவிய மயிலை" என்று இயற்கை எழிலைச் சொல்கிறார். "வடிவுலாவி யாகாசம் மிளிர்பலாவின் நீள்சோலை வனசவாவி பூவோடை வயலோடே, மணிசெய் மாடமாமேடை சிகரமோடு வாகான மயிலை" என்பதில் இயற்கை யெழிலும் செயற்கை வளமும் ஒன்றி யிருப்பதைச் சொல்கிறார். இந்த இரண்டு வளங்களோடே இங்கே வேத வேள்விகள் மல்கி யிருந்தன என்பதை, "சுருதிமறை வேள்வி மிக்க மயிலை நகர்" என்று தெளிவிக்கிறார். இயற்கை யழகு, செயற்கை நலம், தெய்வ அருட்காட்சி, புலவர் வாழும் சிறப்பு ஆகிய எல்லாம் அமைந்தது திருமயிலை. இதனை, "அழகும் இலகிய புலமையும் மகிமையும் வளமும் உறை திரு மயிலை" என்று அடுக்கிச் சொல்வதனால் உணரலாம்.

இவ்வாறு அருணகிரியாரால் பாடப்பெற்ற திருமயிலைத் திருப்புகழ்ப் பாக்களைப் பாராயணம் செய்வதால் இம்மை மறுமைப் பயன்கள் பெறலாம். பொருள் தெரிந்து இன்புற்று ஓதினால் அளவில்லாத மகிழ்ச்சியும் புண்ணியமும் பெறலாம் இத்தகைய வாய்ப்பு அன்பர்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தத் திருக்கோயிற் புரவலர்கள் இப்போது திருமயிலைத் திருப்புகழ்ப் பாக்களைத் தொகுத்து உரையுடன் தனி நூல் உருவில் வெளியிடுகிறார்கள்.

இதற்கு உரை வகுத்தவரைத் தமிழுலகம் நன்கு அறியும்; முருகனுடைய அடியாருலகம் பின்னும் நன்றாக அறியும்; தம்முடைய விரிவுரைகளினால் பண்டித பாமரர் அனைவருடைய உள்ளங்களையும் பிணித்துப் பக்திவசமாக்கும் பேராற்றல்படைத்த திருமுருக கிருபானந்தவாரியவர்கள் இதற்கு உரை எழுதித் தந்தது பாராயணம் செய்பவர்களுக்குப் பெரிய பேறென்றே சொல்ல வேண்டும். திருப்புகழ்ப் பாக்களுக்கு அருளியல், அறிவியல், உலகியல் என்று மூன்று திறத்தையும் பொருத்தி விரிவுரை ஆற்றும் ஸ்ரீ வாரியாரவர்கள் தாம் ஆசிரியராக இருந்து நடத்தும் திருப்புகழமிர்தம் என்னும் மாதப் பத்திரிகையில் மாதந்தோறும் ஒரு திருப்புகழுக்காவது விளக்கவுரை எழுதி வருகிறார்கள். அப்படி எழுதி மெருகேறிய அறிவுத் திறத்தால் இந்தப் பத்துப் பாடல்களுக்கும் சிறந்த முறையில் உரை எழுதியுள்ளார்கள். முதலில் பதவுரையும் பிறகு பொழிப்புரையும் அப்பால் விசேட வுரையும் முடிவில் கருத்துரையுமாக அமைத்து இவ் வுரையைத் தந்திருக்கிறார்கள். விசேட வுரையில் சொல், பொருள், அலங்காரம், நயம் ஆகியவற்றின் விளக்கங்களும் மேற்கோள்களும் இருக்கின்றன. அவை ஆசிரியருடைய நுட்பமும் விரிவும் கொண்ட அறிவுத் திறனைப் புலப்படுத்தும்.

திருமயிலைத் திருப்புகழைப் பாராயணம் செய்யும் அன்பர்களுக்கு இந்த உரை சிறந்த உபகாரமாக இருக்கும். யாவரும் படித்து இன்பமும் இறைவன் திருவருளும் பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

''காந்தமலை'' — கி. வா. ஜகந்நாதன்.
சென்னை-28. — 23—10—59.

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

திருமயிலைக் கபாலீச்சரத்தில் காட்சியருளும் ஸ்ரீ சிங்கார வேலர் மீது ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் திருவாய்மலர்ந் தருளிய திருப்புகழ்ப்பாடல்களை, திருமுருக கிருபானந்தவாரி அவர்களின் உரையுடன் தேவஸ்தானத்தில் வெளியிடும் வாய்ப்பைக் குறித்துப் பெருமிதம் அடைகிறோம். ஸ்ரீ வாரியார் அவர்களின் உரை தமிழில் அதிகப் பயிற்சி இல்லா தவர்களும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் அமைந் திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எங்கள் வேண்டுகோ ளுக்கிணங்கி இம்மலரை தேவஸ்தான வேளியீடாகப் பதிப் பிக்க உதவியதற்கு ஸ்ரீ வாரியார் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

'கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா ஜகந்நாதன் அவர்கள் மிகவும் அழகானதொரு முன்னுரை சமர்ப்பித்திருக்கிறார். கபாலீச்சரத்திற்குத் தொண்டு செய்ய எக்கணத்திலும் காத் திருக்கும் திரு. ஜகந்நாதன் அவர்கள் இம் முன்னுரையை வழங்கினது பொருத்தமேயாகும்.

அரசாங்கத்தில் பொறுப்பு வாய்ந்த இலாகாக்களின் அமைச்சராகப் பணியாற்றும் 'நல்லறங்காவலர்' திரு. எம். பக்தவத்சலம் B.A.B.L. அவர்கள் கபாலீச்சரத்தின்முதன்மை பக்தர் என்று சொல்வது மிகையாகாது. இவ்வாலயத்தின் நிர்வாகத்தில் அன்னார் எவ்வளவு ஆர்வமும் அன்பும் வைத் திருக்கிறார் என்பது அனைவரும் அறிந்ததே. பல அலுவல்க ளுக்கு இடையில் இச் சிறு வெளியீட்டிற்கும் ஒரு வாழ்த் துரை எழுதி அவர்களுக்கு இவ்வாலயத்தின்மீது உள்ள ஈடுபாட்டைப் புலப்படுத்தி யிருக்கிறார்கள். இது நாங்கள் செய்த பாக்கியமே.

அ

இவ் வெளியீட்டைத் 'திருப்புகழமிர்தம்' அச்சகத்தார் குறைந்த கால அளவில், சிக்கனமான செலவில் பதித்துக் கொடுத்ததற்கு அவர்களுக்கு நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்ஙனம்

பம்மல் வரதராஜ்,
மானேஜிங் டிரஸ்டி,
கு. அய்யா. சுப்பிரமணிய முதலியார்,
ப. சை. அண்ணாமலை முதலியார்,
டிரஸ்டிகள்.

P. K. வைத்யநாதன், B. Sc.
நிர்வாக அதிகாரி.

ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ கபாலீச்சுரர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை. 13—12—1959.



உ

முருகா

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய

திருமயிலைத் திருப்புகழ்

1

அமரு மமரரினி லதிக னயனுமரி
யவரும் வெருவவரு மதிகாளம்
அதனை யதகரண விதன பரிபுரண
மமைய னவர்கரண அகிலேச

நிமிர வருள்சரண நிபிட மதெனவுன
நிமிர சமிரமய நியமாய
நிமிட மதனிலுண வலசி வசுதவர
நினது பதவிதர வருவாயே

சமர சமரசுர அசுர விதரபர
சரத விரதஅயில் விடுவோனே
தகுர்த தகுர்ததிகு திகுர்த திகுர்ததிகு
தரர ரரரரிரி தகுர்தாத

எமர நடனவித மயிலின் முதுகில்வரு
மிமய மகள்குமர எமதீச
இயலி னியல்*மயிலை* நகரி லினிதுறையு
மெமது பரகுரவ பெருமாளே.

பதவுரை

அமரும் அமரரினில் அதிகன்=விரும்புகின்ற தேவர்களில் தலைவனாகிய இந்திரன், அயனும்=பிரமன், அரிஅவரும்=திருமால் ஆகிய இவர்கள், வெருவ வரும்=அஞ்சுமாறு வந்த, அதி காளம் அதனை=பெரிய அந்த விஷத்தையும், கரண விதனஅத=அந்தக் கரணங்களின் நடுக்கத்தையும் போக்கியவரே! பரிபுரணம் அமை அனவர் கரண=சிந்தை நிறைவு அமைந்தவர்களின் மனதில் இருப்பவரே! அகிலஈச=எல்லாவற்றுக்குந் தலைவரே! நிமிர சரணம் அருள் = நாங்கள் தாழ்ந்து போகாமல் உயருமாறு உமது திரு வடிக்கு அடைக்கலம் அருள்புரியவேணும்; நிமிடம் அது என= அந்த ஆலகாலம் நெருங்கிவருகின்றது என்று முறையிட்ட தேவர் கள், உன நிமிர=நினைக்கின்ற அளவிலே, சமிர மய=வாயுவேக மாக, நியமாய=ஒழுங்காக, நிமிடம் அதனில் உணவல=ஒரு நிமிட நேரத்தில் அவ்விடத்தை உண்ண வல்லவரான, சிவசுத வர= சிவபெருமானுடைய சிறந்த புதல்வரே! சமரச அமர சுர=ஒற்று மையும் நெடுங்காலத்துக்கு அழியாமையும் உடைய தேவர்களுக்கு, இதர பர அசுர=கீழான பகைவராகிய அசுரர்கள்மேல், சரதவிரத அயில்=உண்மையான ஆணை தருவதாகிய வேலாயுதத்தை, விடு வோனே=விட்டவரே! தகுர்த தகுர்ததிகு திகுர்த திகுர்ததிகு தரர ரரரரிரி தகுர்தாத=தகுர்த......தகுர்தாத என்ற தாள ஒலியுடன், எமர = எங்களுக்கு வேண்டிய, நடன வித = நடன வகைகள் கொண்டுள்ள, மயிலின் முதுகில் வரு=மயிலின் முதுகின்மீது எழுந்தருளி வருகின்ற, இமய மகள் குமர=பார்வதி பாலரே! எமது ஈச=எங்கள் தலைவரே! இயலின் இயல்=இயற்றமிழ் விளங்கும், மயிலை நகரில்=திருமயிலாப்பூரில், இனிது உறையும்=இன்பமாக வீற்றிருக்கும், எமது பர குரவ=எங்கள் மேலான குருமூர்த்தியே! பெருமாளே = பெருமையில் சிறந்தவரே! நினது பதவி தர வருவாயே=உமது குகசாயுச்ய பதவியைத் தந்தருள அடியேன்முன் வந்தருளுவீர்.

பொழிப்புரை

விரும்புகின்ற தேவர்களின் தலைவனை இந்திரனும், பிரமாவும், திருமாலும் அஞ்சும்படி வந்த பெரிய நஞ்சு

போன்ற சூரனை மனேதுக்கம் போகுமாறு அழித்தவரே! சிந்தையில் நிறைவு பெற்றவர் மனதில் உறைபவரே! எல்லாவற்றுக்கும் தலைவரே! அடியேங்கள் உய்யுமாறு அருள் செய்யும், ஆலகால விடம் நெருங்கி வருகின்றது என்று கூறி அமரர்கள் வேண்ட, அவர்கள் நினைத்தமாத்திரத்தில் வாயுவேகமாக உடனே ஒழுங்குடன் ஒருநிமிடநேரத்தில் அந்த நஞ்சினை அருந்த வல்ல சிவபெருமானுடைய சிறந்த புதல்வரே! ஒற்றுமையும், நீண்ட காலம்வரை அழியாத தன்மையும் உடைய தேவர்கட்குப் பகைவரான கீழான அசுரர்கள்மீது உண்மையான ஆணையாற்றல் படைத்த வேலாயுதத்தைச் செலுத்தியவரே! தகுர்த தகுர்ததிகு திகுர்த் திகுர்ததிகு தரர ரரர ரிரி தகுர்தாத என்ற தாள வொத்துடன் எமக்கு வேண்டிய விதமாக நடன வகைகள் கொண்டுள்ள மயிலின்மீது எழுந்தருளி வருகின்ற பார்வதி பாலரே! எங்கள் தலைவரே! இயற்றமிழ் நிறைந்ததிருமயிலையில் வாழ்கின்ற எமது மேலான குருமூர்த்தியே! பெருமிதம் உடையவரே! உமது குகசாயுச்ய பதவியைத் தந்தருளுமாறு அடியேன்முன் வந்தருளுவீர்.

விரிவுரை

அமரும் அமரரினில் அதிகன்:—

அமர்தல்—விரும்புதல். தேவர்கள் நெடுங்காலம் வாழக்கூடியவர்கள் ஆதலின் அமரர் எனப்பட்டனர்.

தேவர் தலைவன் இந்திரன், பிரமா, விஷ்ணு இவர்கள் அஞ்சும்படி வந்தனன் சூரன்.

அதிகாளம்:—

இங்கே பெரிய நஞ்சு என்றது உவம ஆகு பெயராக சூரபன்மனைக் குறிக்கின்றது.

அத கரண விதன:—

கரணம்—அந்தக்கரணம், விதனம்—நடுக்கம். அத—போக்கியவர்,

சூரபன்மன் முடிவில் ஒரே இருள் மயமாக விடம் போல் வந்தபோது, அமரர் முனிவர் அடியவர்கள் மனம் நடுக்கமுற்று முருகா! முருகா! என்று முறையிட்டார்கள். முருகவேள் அவர்களுடைய நடுக்கத்தை அதஞ் செய்தனர்.

''அரியும் அயனோ டபய மெனவே
அயிலை இருள்மேல் விடுவோனே'' —திருப்புகழ்.

பரிபுரண மமைய னவர் கரண:—

பரிபூரணம் அமை அன்னவர் கரண—மனதில் நிறைவு பெற்ற அமைதியானவர்களது கரணத்தில் இருப்பவன் இறைவன்.

''செல்வம் என்பது சிந்தையின் நிறைவு'' என்பார் குமரகுருபரர். மன நிறைவு பெறுதலே சிறந்த பேறு என வுணர்க.

நிமிர அருள் சரண:—

பாற்கடலில் ஆலகாலம் தோன்றியபோது, தேவர்கள் திருக்கைலாய மலைக்கு வந்து, 'சுவாமீ! நாங்கள் தாழ்ந்து அழியாது நிமிர்ந்து உய்யுமாறு அருள வேண்டும்' என்று முறையிட்டார்கள்.

நிபிடம் அது என:—

நிபிடம் — நெருக்கம். விடம் நெருங்கி வருகின்றது என்று கூறி முறையிட.

உன நிமிர:—

உன—உன்ன; நினைக்க. நினைத்தமாத்திரத்தில் உயர்ச்சி யடைய.

சமிர மய:—

சமீரன்—வாயு. சிவபெருமான் வாயுவேகத்தில் அவ் விடத்தை உண்டார்,

நியமாய:—

நியமமாக—ஒழுங்காக. நியமம் என்பது நியம் என வந்தது.

நிமிடம் அதனில் உண வல சிவ:—

நிமிட நேரத்துக்குள் நஞ்சினை உண்ண வல்ல சிவபெருமான்.

நினது பதவி:—

முருகனுடைய சாயுச்ய பதவி. இது சிவஞானத்தால் வருவது.

சமரசம்:—

சமரசம் — ஒற்றுமை. வேற்றுமை மிக்க வேதனை தருவது. ஒற்றுமை உயர்வைத் தருவது.

அசுர குணம் வேற்றுமை. தேவ குணம் ஒற்றுமை.

அசுர விதர பர:—

இதர-கீழான. பர-அந்நியமான. அசுர-இராக்கதர்கள்.

சரத விரத அயில்:—

சரதம் - உண்மை. விரதம்- ஆணை. அயில் – வேல். உண்மையான ஆக்ஞா சக்தியானது வேலாயுதம்.

இயலின் இயல் மயிலை:—

இயற்றமிழ் நிறைந்த தண்டமிழ்ப் பதி திருமயிலாப்பூர். இது எலும்பைப் பெண்ணுக்கிய அற்புதத் திருத்தலம். அம்பிகை வழிபட்ட அரிய தலம்.

கருத்துரை

வேலாயுதரே! மயில் வாகனரே! மயிலை மேவு மாதேவரே! உமது சாயுச்ய பதவியைத் தந்தருள்வீர்.

—

2

அயிலொத் தெழுமிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே
சயிலத் தெழுதுணை முலையாலே
தடையுற் றடியனு மடிவேனோ
கயிலைப் பதியரன் முருகோனே
கடலக் கரைதிரை யருகேசூழ்
மயிலைப் பதிதனி லுறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே.

பதவுரை

கயிலை பதி அரன் = திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுடைய, முருகோனே = குழந்தையே, கடல் அ கரை திரை அருகு சூழ் = அந்தக் கடலின் கரையில் அலைகள் அருகில் சூழ்கின்ற, மயிலை பதிதனில் உறைவோனே = திருமயிலாப்பூரில் வாழ்கின்றவரே! மகிமைக்கு அடியவர் = மகிமை பொருந்திய அடியார்கள் போற்றுகின்ற, பெருமாளே = பெருமை மிகுந்தவரே! அயில் ஒத்து எழும் = வேலை நிகர்த்து எழுந்துள்ள, இரு விழியாலே = இரண்டு கண்களாலும், அமுது ஒத்திடும் = அமுதத்துக்கு ஒப்பான, அருமொழியாலே = அருமையான சொற்களாலும், சயிலத்து எழு = மலைபோல் பருத்து எழுந்துள்ள, துணை முலையாலும் = இரண்டு தனங்களாலும், தடை உற்று அடியனும் மடிவேனோ = அடியேன் முத்திநெறிக்குத் தடைபட்டு இறப்பேனோ?

பொழிப்புரை

திருக்கயிலாய மலையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருக்குழந்தையே! கடற்கரையில் அலைகள் அருகில் சூழுகின்ற திருமயிலாப்பூரில் வாழ்பவரே! பெருமையுடைய அடியவர் போற்றும் பெருமிதமுடையவரே! வேல் போன்ற மாதர்களின் இரு கண்களாலும், அமுதம்போன்ற அரிய சொற்களாலும், மலை போன்ற இரு தனங்களாலும், அடியேன் முத்திநெறி செல்லாது தடைபட்டு மடியலாமோ?

விரிவுரை

தடையுற் றடியனு மடிவேனோ?

ஆன்மா ஒவ்வொரு கணமும் யாத்திரை புரிந்துகொண்டிருக்கின்றது. இந்த யாத்திரை எப்போது தொடங்கிற்று என்று கூற இயலாது. ஆனால் முத்திநெறி யறியாது மூர்க்கரொடு கூடி வழியுங் குழியும் அறியாது அலைகின்றது. அந்தோ! எத்தனையோ யுகங்களாக இங்ஙனம் அலைகின்ற ஆன்மாவுக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை ஆசைதான். வேகமாகச் செல்லும் தேரை முட்டுக்கட்டை தடுப்பது போல், ஆன்மாவின் முத்தியாத்திரையை ஆசைமலை தடுக்கின்றது. அந்த ஆசையை வளர்க்கின்ற பொருள் மகளிரின் மொழியும் விழியும் தனமும் என வுணர்க.

கயிலைப் பதியரன் முருகோனே:—

முருகு—இளமை. இங்கே முருகன் என்ற சொல் குழந்தை என்ற பொருளில் வந்தது.

“சிவகாமி பத்தினியின் முருகோனே” என்று வேறு திருப்புகழிலும் கூறுகின்றார்.

கடலக் கரைதிரை அருகே சூழ் மயிலைப்பதி:—

நீலக் கடலின் காட்சி கண்ணுக்கு இனியது; அதன் காற்று மெய்க்கு இனியது; கடல் ஓசை செவிக்கு இனியது. அதன் அருகில் மயிலையில் முருகன் உணர்வுக்கு இனியனாக எழுந்தருளியிருக்கின்றான்.

மகிமைக் கடியவர்:—

மகிமைக்கு என்ற நான்கன் உருபு, மகிமையை உடைய என்று இரண்டனுருபாகக் கொள்ள வேண்டும்; உருபு மயக்கம்.

கருத்துரை

சிவகுமாரரே! மயிலாப்பூரில் வாழும் முருகவேளே! மாதராசையால் தடைபட்டு மடியாது அடியேனை ஆட்கொள்வீர்.

3

அறமிலாவதி பாதக வஞ்சத் தொழிலாலே
அடிய னேன்மெலி வாகிம னஞ்சற் றிளையாதே

திறல்கு லாவிய சேவடி வந்தித் தருள்கூட
தினமு மேமிக வாழ்வுறு மின்பைத் தருவாயே

விறல்நி சாசரர் சேனைக ளஞ்சப் பொரும்வேலா
விமல மாதபி ராமிதருஞ் செய்ப் புதல்வோனே

மறவர் வாணுதல் வேடைகொ ளும்பொற் புயவீரா
மயிலை மாநகர் மேவிய கந்தப் பெருமாளே.

பதவுரை

விறல் நிசா சரர் = வலிமை மிகுந்த அசுரர்களுடைய, சேனைகள் அஞ்ச = சேனாவீரர்கள் பயப்படும்படி, பொரும் வேலா = போர் செய்த வேலாயுதக் கடவுளே! விமல = மலம் இல்லாதவரே! மாது அபிராமி தரும் = அன்னையாகிய அபிராமி பெற்ற, செய் புதல்வோனே = சிவந்த குமாரரே! மறவர் = வேடர் குலத்தில் வந்த, வாள் நுதல் = ஒளி பெற்ற நெற்றியுடைய வள்ளியம்மை, வேடை கொளும் = விருப்பங் கொள்கின்ற, பொன் புய வீரா = அழகிய புயத்தையுடைய வீரரே! மயிலை மாநகர் மேவிய = திருமயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள, கந்த = கந்தக் கடவுளே! பெருமாளே = பெருமையில் மிகுந்தவரே! அறமிலா அதிபாதக = தருமமேயில்லாத மிக்க பாவகரமான, வஞ்ச தொழிலாலே = வஞ்சனை நிறைந்த செயல்களாலே, அடியனேன் மெலிவு ஆகி = அடியவனாகிய தமியேன் தளர்ச்சியுற்று, மனம் சற்று இளையாதே = மனம் சிறிதும் சோர்வு அடையாமல், திறல் குலாவிய = பாவங்களை நீக்குகின்ற வலிமை விளங்கும், சே அடி வந்தித்து = உமது சிவந்த திருவடியை வணங்கி, அருள் கூட = திருவருள் கூடுமாறு, தினமும் மிக வாழ்வுறும் இன்பை = நாள்தோறும் நல்ல வாழ்வு தரும் இன்பத்தை, தருவாயே = தந்தருளுவீர்.

பொழிப்புரை

வலிமை மிகுந்த அசுரருடைய சேனைகள் அஞ்சுமாறு போர் செய்த வேலாயுதரே! மலம் இல்லாதவரே! அன்னையாகிய அபிராமி பெற்ற சிவந்த குமாரரே! வேடர் குலத்தில் பிறந்த ஒளி பெற்ற நெற்றியையுடைய வள்ளியம்மையார் விருப்பங் கொண்ட அழகிய வீரரே! திருமயிலாப்பூரில் எழுந்தருளிய கந்தநாயகனே! பெருமிதம் உடையவரே! தருமமில்லாத மிகுந்த பாவகரமான செயலினால், அடியனேன் மெலிந்து மனம் சிறிதும் இளைக்காமல், வினைகளைப் போக்குந் திறமுடைய செவ்விய திருவடிகளை வணங்கித் திருவருள் கூடும்படி, நாள்தோறும் மிகுந்த வாழ்வுடன் கூடிய இன்பத்தைத் தந்தருள்வீர்,

விரிவுரை

அறமிலா அதிபாதக வஞ்சத் தொழிலாலே:—

அறுக்கப்பட்டது அறம்; இன்ன இன்னபடி ஒழுக வேண்டும் என்று பெரியோர்களால் அறுதியும் உறுதியுமாக நிர்ணயிக்கப்பட்டது அறம். இறைவனை "அறவா" என்று காரைக்காலம்மையார் அழைக்கின்றார். அறஞ் செய விரும்பு என்கின்றார் ஔவையார்.

அதிபாதகங்கள்: குருதாரகமனம், சிவநிந்தை, குருநிந்தை, நன்றி கோறல் முதலியனவாம். இத்தகு பாவங்களைச் செய்வதற்கு எத்தனை எத்தனை வஞ்சனைச் செயல்களைப் புரிகின்றார்கள்.

மகான்களின் மனம் நோவப் பேசக்கூடாது. உத்தமமான பத்தினிகள் உள்ளம் உலைய நடக்கக் கூடாது. அதிபாதகம் புரிந்தோர், மறுபிறப்பில் பன்றியாகவும் நாயாகவும் பிறந்தும், வெந்தழல் நரகிடை கிடந்தும், தொழுநோய், காசநோய் முதலிய பிணியினராய்ப் பிறந்து வேதனையுறுவர்.

திறல் குலாவிய சேவடி;—

அடியார்களின் வினைகளை அகற்றும் ஆற்றல் படைத்தது முருகப் பெருமானுடைய திருவடி.

"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்"
— திருமுருகாற்றுப்படை.

"செம்மலர் நோன்றாள்" — சிவஞானபோதம்.

நோன்மை—வலிமை. அடியவர்களுடைய வினைகளைக் களையும் வலிமையுடையது இறைவனுடைய திருவடி.

சேவடி – செம்மைப் பண்புடையது அடிமலர்.

"கையோ அயிலோ கழலோ முழுதும் செய்யோய்"—அநுபூதி.

இன்பைத் தருவாயே:—

இன்பம் என்பது எந்தத் திசையில் உளது என்பதையே அறியாது மக்கள் துன்புறுகின்றனர். உலகிலே செல்வத்தால் துன்பம்; மனைவி மக்களால் துன்பம்; நன்கு சிந்தித்தால் இந்த உடம்பினாலுந் துன்பந்தான். இன்ப ஊற்று இறைவன் திருவடியில் ஊறுகின்றது. எனவே இறைவனுடைய திருவடியைச் சிந்தித்தும், வந்தித்தும் வாழ்த்தியும் மனக் கவலையை மாற்றி இடையறாத இன்பத்தைப் பெறவேண்டும்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. —திருக்குறள்.

அங்ஙனம் பெற்ற அப்பரடிகள், "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்கின்றார்.

விறல் நிசாசரர்:—

சூராதியவுணர், மாலயனாதி வானவர்களை வெல்லும் பேராற்றல் படைத்தவர்கள்.

திருமால் விடுத்த சக்ராயுதத்தைத் தாரகாசுரன் கழுத்தில் ஆரமாக அணிந்தனன். முருகப்பெருமான் ஒருவரே தமது வேற்படையால் அவர்களை அழித்து அமரர்களுக்கு ஆக்கமும் வாழ்வும் அளித்தனர்.

விமலா:—

உடம்புக்கு எல்லா நோய்க்கும் மூலகாரணம் மலபந்தம். அதுபோல் உயிருக்கு எல்லாத் துன்பங்கட்கும் மூலகாரணம் ஆணவ மலபந்தம் என அறிக. அந்த மூல மலத்தை யகற்ற கன்மம் மாயை என்ற இரு மலங்களை (ஆகந்துக) இடையில் தந்தருளினார். இம் மும்மலங்களால் உயிர்கள் எத்தனையோ காலங்களாக இடர்ப்படுகின்றன,

இம்மலம் ஆன்மாவுக்குப் புதிதன்று: தொன்மை. செம்பினில் களிம்பு போலவும், நெல்லிற்கு உமிபோலவும் என அறிக

"நெல்லிற் குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே" —சிவஞானபோதம்.

இந்த ஆணவ மலம் சகசம் (இயற்கை) எனப்படும்.

கண்ணை மறைக்கும் இருள்போல் ஆணவம் உயிரின் அறிவை மறைத்து நிற்கும். பூத இருள் ஒருபொருளையுங் காட்டாது. ஆனால் தன்னைக் காட்டி நிற்கும். ஆணவ இருள் பிறபொருளைக் காட்டாமையுடன் தன்னையுங் காட்டிக்கொள்ளாது நிற்கும்.

ஒருபொருளும் காட்டா திருளுருவங் காட்டும்
இருபொருளும் காட்டா திது. —திருவருட்பயன்.

மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்ற ஏழும் ஆணவ மலத்தின் காரியங்கள் என்று சிவஞான முனிவர் கூறுவர்.

விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என்ற எட்டும் ஆணவ மலத்தின் குணக்குறி என்று அருணந்தி சிவனார் இருபாஇருபஃது என்ற நூலில் கூறுவர்.

ஒன்றதாய் அநேக சக்தி யுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று போத் திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம் பேய்ந்து
என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே.
—சித்தியார்.

கன்மம்:—

ஆணவமலச்சார்பால் உயிர்கள் புரியும் வினைகளின் தொகுப்பே கன்ம மலம் ஆகும். உயிர்களின் இன்ப துன்ப நுகர்ச்சிகளுக்குக் காரணமாய் அமைவன இரு வினைகளே யாம்.

வினையானது மந்திரம் முதலிய அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்கு காயங்களால் ஈட்டப்பட்டுத் தூலகன்மமாய்

அகாமியம் எனப் பெயர் பெற்று, பின்னர்ப் பக்குவமாம் வரை சூக்குமகன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக் கோடாக மாயையில் கிடந்து, சாதி, ஆயு போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூர்வம் 'சஞ்சிதம்' புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன் படுங்கால் ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தால் பலதிறப்பட்டுப் 'பிராரத்தம்' எனப்படும்.

> தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து
> நன்மைதீ மையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண
> முன்னமே ஆன்மா வின்தன் மும்மலத் தொன்ற தாகிக்
> கன்மமும்மூலங்காட்டிக் கான்மிய மலமாய்நிற்கும். —சித்தியார்.

மாயை:—

இவ்வாறு வினையுண்மை பெறப்படவே, அஃது எய்தற்குப் பற்றுக்கோடாகிய மாயையுண்மையும் பெறப்படும். உலகிற்கு முதற்காரணம் எதுவோ அதுவே மாயையாகும்.

மா - ஒடுங்குதல்; யா - வருதல்.

எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும், தன்னினின்று தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது மாயை எனப்படும். ஒன்றற்கொன்று நுண்ணிதிற் செல்லும் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப்பொருள் யாது, அது மாயை என்க.

மாயையின் காரியம் தனு கரண புவன போகம் என்பன.

மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என்ற இருவகைப் பட்டுத் தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்கட்குக் காரணமாம்,

ஆணவ இருளில் அழுந்திக் கேவல நிலையில் அறிவிழந்து கிடக்கும் உயிர்கட்கு உடலும் கருவியும் பிறவுமாக அமைந்து ஒருசிறிது அறிவாகிய ஒளியைத் தோற்றி உதவி செய்வது மாயையேயாகும். ஆதலினால் மெய்கண்டசிவம்,

> "மாயா தநுவிளக்காம் மற்றுள்ளம் காணுதேல்
> ஆயாதாம் ஒன்றை"

என்று அருளிச்செய்தார்.

ஆணவம் அறிவைத் தடுக்கும் இருள். மாயை அறிவைச் சிறிது வெளிப்படுத்தும் ஒளி. இருளும் ஒளியும் போல் இரண்டும் மாறுபட்டவை.

இங்ஙனம் உயிர்களின் இச்சை அறிவு செயல்களை விளக்கும் இயல்பிற்றாய மாயை ஒரோவழி ஆணவமலத் தொடர்பால் உயிர்களின் இச்சை அறிவு செயல்களை மறைப்பதும் உண்டு. ஆயினும் அப் பெற்றி மாயைக்கு ஆணவ மலச் சார்பினாலாய செயற்கையேயன்றி இயற்கையன்று.

நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத் திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே.

—சித்தியார்.

மாதாபிராமி தருஞ் செய்ப் புதல்வோனே:—

அபிராமி — மிக்க அழகுள்ளவள். செய் — சிவப்பு.

முருகப்பெருமான் செம்பொருள். செம்மையானவர். "கையோ அயிலோ கழலோ முழுதும் செய்யோய்" என்கின்றார் அநுபூதியில் சுவாமிகள்.

மறவர் வாணுதல்:—

மறவர் - வீரர்கள்; வேடர்கள். வாள்-ஒளி. நுதல்-நெற்றி.

கண்ணுதல் – நெற்றியிலே கண்ணுடையவர், என்பது போல் ஒளியுடைய நெற்றியுடையவர் வள்ளி பிராட்டியார். அதனால் வாணுதல் என்றனர். இங்கே ஒளி என்பது ஞான வொளி என வுணர்க வள்ளியம்மை ஞானம்பாள். "சுந்தர ஞான மென் குறமாது", "வனமீது செறி ஞான குறமாது" என்று வேறு திருப்புகழ்களில் வருவதாலும் அறிக.

வேடை கொளும் புயவீரா:—

வள்ளியம்மையார் முருகவேளுடைய புயத்தின்மீது அன்புகொள்ளுகின்றனர்.

அறிவு அஞ்சாமையுடையது. அறிவுடைய ஞானிகள் ஒன்றுக்கும் அஞ்சார். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்பது ஞான வீரர் அப்பருடைய அமுதவாக்கு. அறிவுக்கு அஞ்சாமை இலக்கணம் என்றேன். அஞ்சாதவர் யாவரும் ஞானிகள் என்று அறிதல் கூடாது. பாலுக்கு வெண்மை இலக்கணம். வெண்மையான சுண்ணாம்புநீரைப் பால் என மயங்கி யறியக் கூடாது.

புயம் – ஆண்மையுடையது. ஞானமாகிய வள்ளி, ஆண்மை செறிந்த வீரத்தை விரும்புகின்றது என நுனித்து உணர்க.

மயிலை மாநகர்:—

மா – பெருமை.

திருஞான சம்பந்த சுவாமிகள் என்பை எழிலமைந்த ஏந்திழையாகச் செய்த பெருமை தங்கிய திருத்தலம் திருமயிலாப்பூர்.

கந்தன்:—

பகைவருடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கின்றவன்; ஆறு திருமேனி பொருந்தப் பெற்றவன்; ஆன்மாக்களாகிய யானைகளைக் கட்டுந் தறி போன்றவன் என்று பல பொருள்களை யுடைய அரிய திருநாமம் கந்தன் என்பது. சுப்ரமண்யருடைய 108 நாமங்களில் முதலில் நிற்பது "ஸ்கந்தாய நம:" என்றது. எம்பிரானுடைய புராணத்துக்கும் சுப்ரமண்ய புராணம் ஷண்முக புராணம் என்று பெயர் அமையாது கந்தபுராணம் என்று பேர் அமைந்திருப்பதனாலும் கந்த நாமத்தின் முதன்மையைக் கருத்திலிருத்துக. இனி கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, கந்தர் கலி வெண்பா என்பனவாதி அரிய நூல்கட்கும் கந்த என்ற சொல்லால் பேர் அமைந்திருப்பதையும் இங்கு உன்னுக.

கருத்துரை

வேலவரே! பார்வதி பாலகரே! வள்ளி மணவாளரே! மயிலை வாழும் வரதரே! உமது திருவடி யின்பத்தைத் தந்தருள்வீர்.

4

இகல வருதிரை பெருகிய சலநிதி
நிலவு முலகினி லிகமுறு பிறவியி
னினிமை பெறவரு மிடருறு மிருவினை யதுதீர

இசையு முனதிரு பதமலர் தனைமன
மிசைய நினைகிலி இதமுற உனதரு
ளிவர உருகிலி அயர்கிலி தொழுகிலி உமைபாகர்

மகிழு மகவென அறைகிலி நிறைகிலி
மடமை குறைகிலி மதியுணர் வறிகிலி
வசன மறவுறு மவுனமோ டுறைகிலி மடமாதர்

மயம தடரிட இடருறு மடியனு
மினிமை தருமுன தடியவ ருடனுற
மருவஅருள்தரு கிருபையின் மலிகுவ தொருநாளே

சிகர தனகிரி குறமக ளினிதுற
சிலத நலமுறு சிலபல வசனமு
திறைய அறைபயி லறுமுக நிறைதரு மருணீத

சிரண புரணவி தரணவி சிரவண
சரணு சரவண பவகுக சயஜெளி
திரவ பரவதி சிரமறை முடிவுறு பொருணீத

அகர உகரதி மகரதி சிகரதி
யகர அருளதி தெருளதி வலவல
அரண முரணுறு மசுரர்கள் கெடஅயில்
விடுவோனே

அழகு மிலகிய புலமையு மகிமையும்
வளமு முறைதிரு *மயிலையி* லநுதின
மமரு மரகர சிவசுத அடியவர் பெருமாளே.

பதவுரை

சிகர தனகிரி = உயர்ந்த மலைபோன்ற தனங்களையுடைய, குறமகள் இனிது உற = வள்ளியம்மை இனிமை பெறுமாறு, சிலத நலம் உறு சிலபல அமுது = ஏவல் செய்வோன் போன்று நன்மை கொண்ட சில பல வார்த்தைகளாகிய அமுதத்தை, இறைய அறை பயில் அறுமுக = பரப்பிப் பேசப் பயின்ற ஆறுமுகக் கடவுளே! நிறைதரும் அருள்நீத = எங்கும் நிறைந்து விளங்கும் அருள் மிகுந்த நீதிமானே! சீர் அண = பெருமை பொருந்திய, புரண = பழமையானவரே! விதரண = தயாளகுணமுடையவரே! விசிரவண = சிறந்த கேள்வியை யுடையவரே! சரண் உ = அடைக்கலம் புகுதற்கு உரிய கடவுளே! சரவணபவ = சரவணப் பொய்கையில் தோன்றியவரே! குக = குகப்பெருமானே! சயன் ஒளி திரவ = சயந்தனுகிய சிவபெருமானுடைய ஒளி பாய்ந்தவரே! பர = மேலானவரே! அதிசிர = மிகுந்த மேன்மை யுடையவரே! மறை முடிவு உறு பொருள் நீத = வேதத்தின் முடிந்த பொருளான நீதியாளரே! அகர = அகர எழுத்துப் போன்ற முதற்பொருளே! உகர தீ = சிவசக்தியாய் விளங்கும் நல்லறிவே, மகர தீ = ஆணவ மலத்தைத் தகிப்பவரே! சிகர தீ = சிவமாகிய அறிவுப்பொருளே! யகர = ஆன்மாவில் விளங்குபவரே! அதி அருள் = அதிக அருளே! அதி தெருள் = அதிக ஞானமே! வல வல அரண முரண் உறு அசுரர்கள் கெட = வலிமை மிகுந்த கோட்டைகளில் இருந்த மாறுபட்ட அசுரர்கள் அழியும்படி, அயில் விடுவோனே = வேலாயுதத்தை விட்டவரே! அழகும் = நல்ல எழிலும், இலகிய புலமையும் = விளங்குகின்ற கலைஞானமும், மகிமையும் = பெருமையும், வளமும் உறை = வளமையும் நிலைத்திருக்கின்ற, திருமயிலையில் = திருமயிலாப்பூரில், அநுதினம் அமரும் = நாள்தோறும் வீற்றிருக்கின்ற, அரஹர = பாவத்தை யழிப்பவராகிய, சிவசுத = சிவகுமாரரே! அடியவர் பெருமாளே = அடியவர்க்கு அருளும் பெருமை மிகுந்தவரே! இகல வரு திரை பெருகிய = ஒன்றோடொன்று மாறுபட்டு வருகின்ற அலைகளுடன் கூடிய, சலநிதி நிலவு = கடல் சூழ்ந்த, உலகினில் இகம் உறு பிறவியில் = உலகத்தில் இம்மையில் உள்ள பிறப்பில், இனிமை பெற = இன்பத்தைப் பெறவும், வரும்

இடர் உறு இருவினை அதுதீர = துன்பத்துடன் வரும் நல்வினை தீவினைகள் ஒழியவும், இசையும் உனது இருபத மலர்தனை = பொருந்திய உமது இரண்டு திருவடி மலர்களை, மனம் இசை நினைகிலி = உள்ளம் பொருந்த நினையாதவன், இதம் உற உனது அருள் இவர உருகிலி = இன்பத்தை யடையுமாறு உமது திருவருளைப் பொருந்துதற்கு உள்ளம் உருகாதவன்; அயர்கிலி = தொண்டு புரிந்து தளர்ச்சியுறாதவன்; தொழுகிலி = உமது திருவடியைப் பணியாதவன்; உமைபாகர் மகிழும் மகவு என அறைகிலி = பார்வதியை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமான் மகிழ்கின்ற குழந்தையே என்று துதி செய்யாதவன்; நிறைகிலி = திருப்தியில்லாதவன்; மடமை குறைகிலி = அறிவின்மை குறையாதவன்; மதி உணர்வு அறிகிலி = அறிவும் அநுபவமும் அறியாதவன்; வசனம் அற உறு மவுனமொடு உறைகிலி = பேச்சற்ற பெருநிலையாகிய மோன சமாதியில் உறையாதவன்; மடமாதர் மயம்அது அடர் = அழகிய மாதர்களின் எண்ணம் அதிகமாக, இடர் உறும் அடியனும் = துன்பத்தை யடைகின்றவனுமாகிய அடியேனும், இனிமை தரும் உனது அடியவர் உடன் உற = இன்பத்தைத் தருகின்ற உமது அடியார்களுடன் கூடி யிருக்கவும், மருவ அருள் தரு கிருபையின் மலிகுவது ஒருநாளே = தேவரீரைப் பொருந்தி திருவருளைத் தருகின்ற கருணைக்கு உரியவனாகி விளங்குகின்ற ஒருநாள் உண்டாகுமோ?

பொழிப்புரை

மலைபோன்ற தனங்களையுடைய வள்ளியம்மை இன்பம் பெறுமாறு, ஏவல்புரிவோன் போன்று, நன்மையான சில பல மொழிகளாகிய அமுதத்தைத் தெளித்துப் பேசுவதற்குப் பயின்ற ஆறுமுகக் கடவுளே! எங்கும் நிறைந்த அருள் மிகுந்த நீதிமானே! பெருமை பொருந்திய பழம் பொருளே! தயாளுவே! மேலான கேள்வியுடையவரே! சரண் புகுதற்கு உரிய கடவுளே! சரவணப் பொய்கையில் அவதரித்தவரே! இதய குகையில் வசிப்பவரே! சிவபிரானுடைய ஒளி பாய்ந்தவரே! மிக்க மேலானவரே! வேத முடிவில் விளங்கும் அரும்பொருளாகிய நீதியாளரே! முதற்பொருளே! சிவசக்தி மயமானவரே! ஆணவமலத்தை

யழிப்பவரே! சிவமாகிய அறிவுப் பொருளே! ஆன்மாவில் உறைபவரே! மிக்க அருளுடையவரே! மிகுந்த ஞானப் பொருளே! மிகுந்த வலிமையுடைய கோட்டையில் வசிக்கும் மாறுபட்ட அசுரர்கள் அழியும்படி வேலாயுதத்தை விடுத்தவரே! அழகும், விளங்கிய கலைஞானமும் பெருமையும் வளமையும் உடைய திருமயிலாப்பூரில் நாள்தோறும் எழுந்தருளியுள்ள. பாவத்தை யழிக்கும் சிவ குமாரரே! அடியார்க்கு அருள்புரியும் பெருமிதம் உடையவரே! ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு எழுகின்ற அலைகளுடன் கூடிய சமுத்திரஞ் சூழ்ந்த உலகிலே இம்மைப் பிறவியில் இன்பம் பெறவும், வருகின்ற துன்பத்துடன் கூடிய நல்வினை தீவினைகள் தீருமாறும் நன்மை பொருந்திய உமது சரணாரவிந்தங்களை மனத்தில் பொருந்த நினையாதவன்; இன்பத்தைப் பெறும்பொருட்டு தேவரீரது திருவருள் பொருந்த உள்ளம் உருகாதவன்; திருத்தொண்டு செய்து தளர்ச்சியுறாதவன்; உமது பாதமலரைப் பணியாதவன்; பார்வதி பங்கராகிய சிவபெருமான் மகிழ்கின்ற குழந்தையே என்று கூறாதவன்; திருப்தி யில்லாதவன்; அறியாமை குறையாதவன்; அறிவும் அநுபவமும் இல்லாதவன்; பேச்சற்ற மௌன நிலையில் நில்லாதவன்; அழகிய மாதர்களால் துன்பம் நெருங்கியுள்ள அடியவனுமாகிய நாயேன் இனிமை தருகின்ற உமது அடியார்களுடன் கலந்து நலம்பெற அருள்கின்ற கருணையில் நிறைகின்ற நாள் ஒன்று உளதாகுமோ?

விரிவுரை

இகல வருதிரை சலநிதி:—

இகல்—மாறுபாடு. திரை—அலை. சலநிதி—கடல், கடலில் அலைகள் சதா ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு எழுந்து வீசிய வண்ணமாகவே யிருக்கும்.

இகமுறு பிறவி:—

இம்மை மறுமை வீடு என ஆன்மாக்களுக்கு மூன்று நிலைகள் உண்டு. இப்போதுள்ள உடம்பு எடுத்துள்ளது இம்மை. இம்மையில் புரிந்தது மறுமைக்கு வரும். இரண்டும் அற்ற நிலை வீடுபேறு.

இடருறும் இருவினையது தீர:—

பிறப்புக்குக் காரணம் வினை. "வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய்; வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவு நில்லாது" என்கின்றார் பட்டினத்துச் சுவாமிகள். வினை தீர்ந்தால் பிறவி தீரும். நல்வினை தீவினை என்ற இரண்டும் பிறப்புக்குக் காரணந்தான். நல்வினை பொன்விலங்கு; தீவினை இரும்பு விலங்கு. எனவே வினை தீர்ந்தால் பிறவி தீரும்.

உனதிரு பதமலர் தனைமன மிசைய நினைகிலி:—

வினைதீர்வதற்கு உபாயம் இறைவன் திருவடியை நினைத்தல்.

"மொய்த் திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி
அந்திப் பிறையணிந்தாடும் ஐயாறன் அடித்தலமே"
—அப்பர் தேவாரம்.

இதமுற உனதரு ளிவர உருகிலி:—

இறைவனை நினைந்து நினைந்து உள்ளம் உருகுவதே முத்தி நெறியாகும். அதுவே நலமுமாகும்.

"கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தானிலாத சிறியேன்" —திருவாசகம்.

"உருகும் அடியவர் இருவினை யிருள்பொரு
முதய தினகர" —திருப்புகழ்.

உருகு மடியார் இருவினைத்தொகை யறுக்குமவன்—திருவகுப்பு.

"முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்" —அநுபூதி.

அயர்கிலி:—

அயர்தல் - தளர்தல். நல்ல திருத்தொண்டுகள் புரிந்து தளர்ச்சி யடைதல் வேண்டும்.

தொழுகிலி:—

கரங்களின் பயன் இறைவனை நறுமலர்களினால் அருச்சித்துத் தொழுவதேயாகும்.

கைகாள் கூப்பித் தொழீர்—கடிமாமலர் தூவிநின்று
பைவாய் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். —அப்பர்.

உமைபாகர் மகிழு மகவென அறைகிலி:—

உலகிலே தன்னைக் காட்டிலும் பிறர் உயர்வாக வரின் யாருக்கும் மனம் உவக்காது. ஆனால் தன்னைக் காட்டிலும் தன்மகன் அறிவு ஆற்றல்களில் உயர்வாக இருப்பின் அதைப் பார்க்கிலும் வேறு மகிழ்ச்சி இராது.

தம்மிற் றம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. —திருவள்ளுவர்.

சிவகுமாரனாகிய முருகவேள் அப்பாவுக்கே ஞானோபதேசம் புரிந்தார். அதனால் சிவபெருமான் பெரிதும் மகிழ்ச்சியுற்றார். ஆதலால் மாதொரு கூறனாகிய சிவபெருமான் மகிழும் குழந்தையே என்று கூறித் துதிக்கவேண்டும்.

நிறைகிலி:—

பெரிய வறுமை எது என்றால் பேராசை மனமே யாகும். பெரிய செல்வம் போதும் என்ற திருப்தியாகும்.

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே" —குமரகுருபரர்.

ஆதலால் எப்போதும் நாம் உள்ளதைக் கொண்டு திருப்தியுடன் வாழவேண்டும்

மடமை குறைகிலி:—

மடம் - அறியாமை. அறிவு வடிவான இறைவனை உபாசித்து அறியாமையைத் தேய்க்கவேண்டும்,

இன்பத்துக்குக் காரணம் அறிவு. துன்பத்துக்குக் காரணம் அறியாமை. அறியாமையைத் தேய்த்தால் துன்பந் தேயும்.

மதியுணர் வறிகிலி:—

மதி- அறிவு உணர்வு—அநுபவ அறிவு. கற்றதனால் வருவது கலையறிவு. அநுபவத்தால் வருவது மெய்யுணர்வு.

வசனமறவுறு மவுனமொ டுறைகிலி:—

மௌனம் என்பது வெறும் வாய்மட்டும் பேசாதது என்று கருதக்கூடாது. மன சம்பந்த மில்லாதது மௌனம். அது ஞானத்தின் முடிவு.

'மோனமென்பது ஞானவரம்பு' —ஔவையார்.

உரையும் உணர்வும் கடந்த இடம் மௌனம், பேசா அநுபூதி எனப்படும் பெரு மோனவாழ்வு அது.

''மௌனத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டது இவ்வுடம்பே''
—அலங்காரம்.

மடமாதர் மயம தடரிட இடருறும் அடியன்:—

உலகிலே பெரும்பாலும் துன்பம் அதிகமாக வருவது பெண்களாலேயே.

தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையரால் வரும்
காமமில்லை யெனிற் கடுங் கேடெனும்
நாமமில்லை நரகமு மில்லையே. —கம்பநாடர்.

அடியவருடனுற மருவ:—

அடியாருறவு சகல குணக்கேடுகளையும் அகற்றி சதானந்த வாழ்வு தரும்.

''துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்''

என்கின்றார் தாயுமானார்.

சிலத:—

சிலதன் – ஏவல்புரிவோன்,

முருகன் தனது எல்லையற்ற கருணையால் வள்ளியிடம் பணியா வெனக் கேட்டு அருள்புரிந்தான்.

வசனமு திறைய அறைபயில் அறுமுக:—

முருகன் வள்ளி பிராட்டியிடம் அமுதம் போன்ற மிக இனிய சொற்களைக் கூறிப் பயின்று அருள்புரிந்தார்.

சிரண:—

சீர் அண என்பது சிரண என்று வந்தது.

சீர்—சிறப்பு. அண (அண்ண) பொருந்த;

"அண்ணிப்பான் தாள்வாழ்க" —சிவபுராணம்.

புரண:—

புராணம் – பழமை. புராணம் என்பது புரண என வந்தது. முருகன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளானவன்.

"மூதக்கார்க்கு மூதக்கவன்" —கந்தபுராணம்.
"தனது தொல்லைத் திருமுகம் ஆறும்" —கந்தபுராணம்.
"பழைய வடிவாகிய வேலா" —திருப்புகழ்.

விதரண:—

விதரணம் – கருணை. சமர்த்து.

விசிரவண:—

வி - மேலான. சிரவணம் - கேள்வி.

மேலான கேள்விகளை யுடையவன் விசிரவணன்.

சரணு—

சரண்—அடைக்கலம். உ – கடவுள்.

ஆன்மாக்கள் அடைக்கலம் புகுவதற்கு உரிய கடவுள்.

பரவதி:—

அதிபர என மாற்றுக. பர – மேலானது.

அகர:—

கடவுள், அகர உயிர் எல்லா எழுத்துக்களிலும் விரவி முதன்மை பெற்றதுபோல் எங்கும் கலந்து முதன்மை பெற்றவர்.

அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து. — திருவருட்பயன்.

உகரதி:---

உகரம் – சிவசக்தி.

முருகவேள் சிவசக்தி மயமானவர். சிவஞானபூரணர்.

சிகரதீ:--

சி—சிவம். சிவமேயாயவர் கந்தவேள்.

யகர:--

ஆன்ம எழுத்து யகரம்.

ஒவ்வொரு உயிர்களிலும் உறைகின்றவன் இறைவன்.

அருளதி:--

அதிகம் அருள் நிறைந்தவர்.

தெருளதி:--

அதிகம் ஞானமேயானவர்.

அரண முரணுறு மசுரர்கள்:--

அரணம் - காவல்கோட்டை. முரண் – மாறுபாடு.

அழகு மிலகிய புலமையு மகிமையும் வளமு முறைதிரு மயிலை:--

திருமயிலை அழகு, சிறந்த கலாஞானம், பெருமை, வளமை முதலிய சகல நலன்களும் பொருந்திய திருப்பதி. சென்னைமாநகரின் திலகமாகத் திகழ்வது மயிலாப்பூர்.

கருத்துரை

வள்ளிநாயகரே! திருமயிலைமேவு தேவதேவரே! அடியவருடன் மருவி உய்யுமாறு அருள்புரிவீர்.

5

இணையதில தாமி ரண்டு கயல்களென வேபு ரண்டு
இருகுழையின் மீத டர்ந்து அமராடி
இலகுசிலை வேள்து ரந்த கணையதிலு மேசி றந்த
இருநயனர் வாரி ணங்கு மதிபாரப்

பணைமுலையின் மீத ணிந்த தாளமணி யார்து லங்கு
பருவரதி போல வந்த விலைமாதர்
பயிலுநடை யாலு ழன்று அவர்களிட மோக மென்ற
படுகுழியி லேம யங்கி விழலாமோ

கணகணென வீர தண்டை சரணமதி லேவி ளங்க
கலபமயில் மேலு கந்த குமரேசா
கறுவிவரு சூர னங்க மிருபிளவ தாக விண்டு
கதறிவிழ வேலெ றிந்த முருகோனே

மணிமகுட வேணி கொன்றை அறுகுமதி யாற ணிந்த
மலையவிலி ளைய கன்றன் ஒருபாக
மலையரையன் மாது தந்த சிறுவனென வேவ ளர்ந்து
*மயிலை*நகர் வாழ வந்த பெருமாளே.

பதவுரை

கண கண என = கணகண என்ற இனிய ஒலி செய்து கொண்டு. வீர தண்டை = வீரத்துக்கு அடையாளமான இரத்தின மணித் தண்டை, சரணம் அதிலே விளங்க = திருவடிகளிலே அழகுடன் ஒளி செய்ய, கலப மயில்மேல் உகந்த = கலாபத்துடன் கூடிய மயில்மீது எழுந்தருளியுள்ள, குமர ஈசா = குமாரக் கடவுளே! கறுவி வரு சூரன் அங்கம் = கோபித்து வந்த சூரபன்மனுடைய உடம்பானது, இரு பிளவது ஆக விண்டு கதறி விழ = இரண்டு பிளவு ஆகப் பிரிந்து அவன் ஓ என்று அலறி விழுமாறு, வேல் எறிந்த முருகோனே = வேலாயுதத்தை விடுத்த முருகப்பெருமானே!

மணிமகுட வேணி=அழகிய முடியாகிய சடையில், கொன்றை= கொன்றை மலரையும், அறுகு=அறுகம் புல்லையும், மதி=பிறைச் சந்திரனையும்,ஆறு அணிந்த=கங்காநதியையும்தரித்துக்கொண்ட, மலையவில்லின் = மேருமலையை வில்லாக உடைய, நாயகன்தன் ஒருபாக = தலைவராகிய சிவபெருமானுடைய ஒரு பாகத்தில் உறையும், மலை அரையன் மாது தந்த = இமவானுடைய புதல்வி யாகிய பார்வதிதேவி பெற்றருளிய, சிறுவன் எனவே வளர்ந்து = குழந்தை என்று வளர்ந்து, மயிலை நகர் வாழவந்த = திருமயிலாப் பூர் என்ற திருநகரம் வாழ்வு பெறும் பொருட்டு எழுந்தருளியுள்ள, பெருமாளே=பெருமையிற் சிறந்தவரே! இணையது இலது ஆம் இரண்டு கயல்கள் எனவே புரண்டு = ஒப்பில்லாதனவான இரண்டு கயல்மீன்கள்போல் புரண்டு, இரு குழையின்மீது அடர்ந்து=இரண்டு காதிலுள்ள தோடுகளின்மீது நெருங்கி, அமர் ஆடி = போர் புரிந்து, இலகு சிலைவேள் துறந்த=அழகிய வில்லை யுடைய மன்மதன் செலுத்துகின்ற, கணை அதிலும் சிறந்த=அம் பைக் காட்டிலும் மிகவும் சிறந்தனவான, இரு நயனர் = இரண்டு கண்களை யுடையவர்கள்; வார் இணங்கு = கச்சு பொருந்தியுள் ளனவும், அதிபார = அதிக பாரமுள்ளவைகளுமான, பணைமுலை யின்மீது அணிந்த = பருத்த தனங்களின்மேல் தரித்துள்ள, தரளமணியார் = முத்துமாலையுடையவர்கள்; துலங்கு பருவ ரதி போலவந்த = அழகிய இளமை பொருந்திய ரதிதேவிபோல் வந்த, விலைமானர்=விலை மாதர்கள், பயிலும் நடையால் உழன்று = சாகசங்களைப் பயில்கின்ற நடைகளினால் அடியேன் சுழற்சி யடைந்து, அவர்கள் இடம்=அம் மாதர்மீது, மோகம் என்ற படு குழியிலே=மோகம் என்ற ஆழமான பள்ளத்திலே, மயங்கி விழ லாமோ=மயக்கமுற்று விழக்கடவேனோ?

பொழிப்புரை

கணகண என்ற இனிய ஒலிபுரியும் வீரத்தண்டைகள் திருவடியில் அழகுடன் திகழத் தோகை மயிலின்மீது உலாவும் குமாரக்கடவுளே! கோபித்து வரும் சூரபன்ம னுடைய உடல் இரு பிளவாகப் பிளந்து அவன் அலறி விழுமாறு வேலாயுதத்தை விடுத்தருளிய முருகப் பெரு

மானே! அழகிய சடைமுடியில் கொன்றை அறுகு சந்திரன் நதி இவைகளைத் தரித்து மேருகிரியை வில்லாகக் கொண்ட சிவபெருமானுடைய ஒரு பாகத்தில் இருக்கும் பருவத ராஜ குமாரியாகிய உமாதேவி பெற்ற குழந்தை யெனுமாறு வளர்ந்து, திருமயிலாப்பூர் வாழ்வு பெற எழுந்தருளியுள்ள பெருமிதம் உடையவரே! சமானமில்லாத இரண்டு கயல் மீன்கள்போல் புரண்டு இரு தோடுகளின்மீது பாய்ந்து போர் புரிந்து, அழகிய வில்லை யுடைய மன்மதன் விடுக்கின்ற பாணத்திலும் சிறந்த இரண்டு கண்களை யுடையவரும், கச்சணிந்த பருத்த இரு தனபாரங்களின்மீது முத்து மணிமாலை தரித்தவரும், அழகிய இளம் இரதிதேவி போன்றவருமாகிய விலைமாதர்களின் சாகசம் பயிலும் நடையால் மயங்கி அவர்கள்மீது கொண்ட மோகம் ஆகிய ஆழ்ந்த குழியில் அடியேன் விழலாமோ?

விரிவுரை

இணையதில தாமிரண்டு கயல்களெனவே புரண்டு இருகுழையின் மீதடர்ந்து அமராடி:—

பெண்களின் கண்கள் காதுவரை நீண்டிருப்பது மிகுந்த அழகின் அங்கமாகும்

> "மங்கையர் வதன சீத மதியிரு மருங்கும் ஓடி
> செங்கயல் குழைகள் நாடும திருமுனைப் பாடி நாடு"
>
> —பெரியபுராணம்.

> "காதிற் கலந்த கருங்கண்ணி" —மகாபாரதம்.

இலகுசிலை வேள் துறந்த கணையதிலுமே சிறந்த:—

அழகிய மன்மதனுடைய கரும்பு வில்லிலிருந்து வெளிவரும் கணைகள் ஐந்து மலர்கள். ஆகவே மலர்போன்ற அழகிய கண்கள். விலைமகளிர் ஆடவரை மயக்குதற்கு முக்கியமாகக் கொள்வது தமது கண்வலையேயாகும்.

மோகமென்ற படுகுழியிலே மயங்கி விழலாமோ:—

விலைமகளிரது மோகம் ஒரு ஆழ்ந்த படுகுழிக்குச் சமானமாகும். பயங்கரமான அக்குழியில் வீழ்ந்தோர் உய்வது அரிது.

"இறைவனே! அடியேன் மோகாந்தகாரமான படுபள்ளத்தில் வீழ்ந்து அழியக்கூடாது. எளியேன் உமது அடிமை. என்னை அவ்வண்ணம் விழா வண்ணம் தேவரீர் ஆண்டருள் செய்யும்" என்று அருணகிரிநாதசுவாமிகள் வேண்டுகின்றார்.

கணகணென வீரதண்டை:—

தண்டை குழந்தைகள் அணிகின்ற ஆபரணம். முருகவேள் என்றும் இளமை நலம் மாறாதவர். அவருடைய திருவடியிலே இரத்தினமணிகள் நிறைந்த அழகியதண்டைகள் இனிய ஒலி செய்துகொண்டிருக்கும்.

தாரகன்முன் எம்பெருமான் நின்றபோது அவன் கண்ட காட்சியைக் கச்சியப்பர் கூறுகின்ற அழகிய பாடலையும் ஈண்டு நினைவு கூர்க.

"அணிமணித் தண்டையார்க்கும்
செழுமல ரடியுங் கண்டான அவன்தவம் செப்பற்பாற்றோ"

கறுவிவரு சூரனங்க மிருபிளவதாக உண்டு கதறிவிழ வேலெறிந்த முருகோனே:—

சூரபன்மனுடைய வச்சிர யாக்கையை வேல் இரண்டாகப் பிளந்து எறிந்தது.

"போரவுணன் அங்கம் இருகூறாய்"
—கந்தர்கலிவெண்பா.

சூரபன்மன் ஆணவமலம். அது நான் எனது என்ற இரு தன்மைகளை யுடையது. எனவே அகப்பற்று புறப்பற்று என்ற இரு நிலையால் மயக்கும் ஆணவத்தை ஞான வேலால் பிளந்து அடக்கி யருள்புரிந்தார் முருகவேள்.

"ஒருடல் இரண்டு கூறுபட விடுத்த நெடுவேலோய்"
—கல்லாடம்.

கொன்றை:—

கொன்றை மலர் பிரணவத்துடன் கூடி திருஐந்தெழுத்தைக் குறிக்குஞ் சிறந்த மலர். அது சிவபிரானுக்கே உரியது. நமசிவயப் பொருளான பரம்பொருள் எனக் குறிக்கும் அரிய சின்னமாக விளங்குவது கொன்றைமலர்.

அறுகு:—

அறுகு ஒரு சிறந்த பொருள். அதனால் சிவபெருமானைப் பூசிப்பவர் சிவலோகத்தில் அரனுருடைய அருகு அடைவார்.

மதி:—

சந்திரனை இறைவன் அணிந்திருப்பது ஞானமூர்த்தி என்பதை யுணர்த்துகின்றது.

ஆறு:—

கங்காநதியை யணிந்திருப்பது இறைவனுடைய பேராற்றலைக் குறிக்கின்றது. ஆண்டவனுடைய இடப்புறத்தில் எழுந்தருளியுள்ள உமை இறைவனுடைய ஞானமாகும்.

''சத்திதான் யாதோ என்னில் தடையிலா ஞான மாகும்''
—சித்தியார்.

கருத்துரை

மயில்வாகனரே! மலைமாது தந்த மயிலைமேவு முருகவேளே! மோகத்தைத் தவிர்க்க அருள்புரிவீர்.

6

களபமணி யாரமுற்ற வனசமுலை மீதுகொற்ற
கலகமத வேள்தொடுத்த கணையாலும்
கனிமொழியி னார்கள்முற்று மிசைவசைகள் பேசவுற்ற
கனலெனவு லாவுவட்ட மதியாலும்
வளமையணி நீடு புஷ்ப சயனஅணை மீதுருக்கி
வனிதைமடல் நாடிநித்த நலியாதே
வரியளியு லாவுதுற்ற இருபுயம ளாவி வெற்றி
மலரணையில் நீயணைக்க வரவேணும்

துளபமணி மார்ப சக்ர தரனரிமு ராரி சர்ப்ப
துயிலதர னுதரித்த மருகோனே
சுருதிமறை வேள்விமிக்க *மயிலை*நகர் மேவுமுக்ர
துரகதக லாபபச்சை மயில்வீரா

அளகைவணி கோர்குலத்தில் வனிதையுயிர் மீளழைப்ப
அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா
அருவரையை நீறெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
அமரர்பதி வாழவைத்த பெருமாளே.

பதவுரை

துளபம் அணிமார்ப = துளசி மாலை யணிகின்ற திருமார்பினரும், சக்ரதரன் = சக்கராயுதத்தைத் தரித்தவரும், அரி= பாவத்தைப் போக்குபவரும், முரஅரி=முரன் என்ற அரக்கனை அழித்தவரும், சர்ப்ப துயிலதரன் = ஆதிசேடன்மீது அறிதுயில் புரிபவருமாகிய நாராயணர், ஆதரித்த மருகோனே = அன்பு கொண்ட திருமருகரே! சுருதி=வேதங்களும், மறை = மந்திரங்களும், வேள்வி மிக்க = யாகமும் நிரம்பிய, மயிலை நகர் மேவும் = திருமயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள, உக்ர துரகத=வேகமுடைய குதிரை போன்ற, கலாப பச்சை மயில்வீரா = தோகையுடன் கூடிய பச்சை மயில்மீது வருகின்ற வீரமூர்த்தியே! அளகை வணிகோர் குலத்தில் = அளகாபுரி குபேரனது செல்வம் உடைய வணிகர் குலத்தில் வந்த, வனிதை உயிர்மீள அழைப்ப = பூம்பாவையின் உயிர் மீளுமாறு அழைக்க, அருள் பரவு பாடல் சொற்ற = திருவருள் நிறைந்த தமிழ்ப்பாடலைக் கூறிய, குமரஈசா = குமாரக் கடவுளே! அருவரையை நீறு எழுப்பி = வெல்லுதற்கு அரிய கிரவுஞ்ச மலையைத் தூளாக்கி, நிருதர்தமை வேர் அறுத்து=அசுரர்களை அடியுடன் அழித்து, அமரர்பதி வாழவைத்த = தேவர்களது நகரத்தை வாழவைத்த, பெருமாளே = பெருமையின் மிகுந்தவரே! களபம் = கலவைச் சாந்தும், மணி ஆரம் உற்ற = இரத்தின மணிமாலையுந் தரித்த, வனசமுலைமீது = தாமரை மொட்டு போன்ற தனங்களின்மீது, கொற்ற கலக மதவேள்

தொடுத்த கணையாலும் = வீரம் வாய்ந்தவனும் குழப்பத்தைப் புரிபவனும் மகிழ்ச்சியைத் தருபவனுமாகிய மன்மதன் செலுத்திய மலர்க்கணையாலும், கனிமொழி மினார்கள் = கனிபோன்ற இனிய சொற்கள் பேசும் மாதர்கள், முற்றும் = எல்லாரும், இசை வசைகள் பேச = பொருத்தமான பழிமொழிகள் பேசுவதனாலும், உற்ற கனல் என வுலாவு வட்ட மதியாலும் = நெருங்கிய நெருப்புப் போல உலவிவரும வட்டமான முழு நிலவினாலும், வளமை அணி = செழுமை நிறைந்த, நீடு புஷ்ப சயன அணைமீது உருக்கி = நீணட மலர்ப படுக்கையாகிய மெதமைதமீது உருகிக்கொண்டிருக்கின்ற, வனிதை மடல் நாடி நித்தம் நலியாதே = இப் பெண் மடல் ஏற விருமபி நாள்தோறும் துன்புறாமல், வரி அணி உலாவு துற்ற = வரிகள் கொண்ட வண்டுகள் உலவி நெருங்கியுள்ள, இருபுயம் அளாவி = உமது இரு புயங்களாலும் கலந்து மருவி, வெற்றி மலர் அணையில் = எனது எண்ணம் வெற்றிபெற இம் மலர்பபடுக்கையில், நீ அணைக்க வரவேணும் = தேவரீர் என்னைத் தழுவ வந்தருளுவீர்.

பொழிப்புரை

துளசி மாலை யணிந்த திருமார்பினரும், சக்கராயுதத்தைத் தரித்தவரும், பாவத்தைப் போக்குபவரும், முரன் என்ற அரக்கனை அழித்தவரும், ஆதிசேடன்மீது அறிதுயில் புரிபவரும், ஆகிய நாராயணமூர்த்தி அன்புகொள்கின்ற திருமருகரே! வேதமும் மந்திரமும் யாகமும் நிறைந்த திருமயிலாப்பூரில் எழுந்தருளிய வேகமும் தோகையும்உடைய பச்சை மயில் வாகனத்தை யுடைய வீரமூர்த்தியே! குபேர சம்பத்துடைய வணிகர் குலத்தில் வந்த பூம்பாவை உயிர் பெற்று எழுமாறு திருவருள் மயமான தேவாரப் பாடலைப் பாடிய குமாரக்கடவுளே! வெல்லுதற்கு அரிய கிரவுஞ்ச மலையைத் தூளாக்கி, அசுரர்களை அடியுடன் அழித்து தேவருலகை வாழவைத்த பெருமிதம் உடையவரே! கலவைச் சாந்தும் இரத்தின மணிமாலையுந் தரித்த தாமரை மொட்டு போன்ற தனங்களின்மீது, வீரமும் கலகமும் மகிழ்ச்சியுமுடைய மன்மதன் விடுத்த மலர்க்கணையாலும், கனிபோன்ற இனிய மொழியுடைய பெண்கள் எல்லாரும்

பொருந்திய வசைமொழிகள் கூறுவதாலும், நெருங்கிய நெருப்பு என உலாவுகின்ற வட்டமான முழு சந்திரனாலும் வளமையுடைய அழகிய விசாலமான மலர்ச் சயனத்தின் மீது உருகுகின்ற இந்தப் பெண் மடலூர்வதை நாடி தினந் தோறும் துன்பத்தை யடையாமல், வரிகளுடன் கூடிய வண்டுகள் உலாவும் உமது இரு புயங்களைத் தழுவி, என் எண்ணமானது வெற்றிபெற. இம் மலர்ச்சயனத்தில் என்னைத் தழுவும்பொருட்டு நீர் வந்தருளுவீர்.

விரிவுரை

இத் திருப்புகழ் அகப்பொருள் துறையால், நாயகி நாயக முறையில் எழுந்தது ஆன்மாவாகிய நாயகி முருகனாகிய நாயகனைத் தழுவி இரண்டற்ற அத்துவித முத்தி யின்பத்தைப் பெறுவதற்கு விரும்பி முறையிடுகின்ற முறையில் பாடப்பெற்றது,

வேள் தொடுத்த கணையாலும்:—

வேள் – விருப்பத்தை விளைவிப்பவன்; மன்மதன். இங்கே முருகன்மீது விருப்பம் எழுமாறு ஆன்மாவின் பரஞான அபரஞானமாகிய தனங்களின்மீது அவன் மலர்க் கணை பொழிகின்றான்.

"மாரவே ளேவிய அம்பினாலே" —திருப்புகழ்.

கனிமொழி மினார்கள் முற்று மிசைவசைகள் பேச:—

தலைவனும் தலைவியும் பண்டை ஊழ் கூட்ட ஒன்றுபட்டு, களவுடன் ஒழுகுவதை யறிந்த ஊரவர் அவர்கள் நிலையுணராது கூறும் பழிமொழியை அலர் எனக் கூறுவர்,

அலரறிவுறுத்தல் என்று ஒரு அதிகாரத்தையே திருவள்ளுவர் வகுத்துக் கூறுகின்றார்.

"தெருவினில் நடவா மடவார்
திரண்டொறுக்கும் வசையாலே"

"பாரெலாம் ஏசிய பண்பினாலே"

"ஓராத அனையர் கொடு வசைபேச"

என்று பிற திருப்புகழ்களில் சுவாமிகள் கூறுகின்றனர்

கனலென உலாவு வட்ட மதியாலே:—

விரக முற்றார்க்கு முழு சந்திரனுடைய தண்ணிய கிர ணம் நெருப்புக் குழம்புபோல் சுடும்.

"வாரி மீதேஎழு திங்களாலே"

"தினகர னென வேலையிலே
சிவந்துதிக்கு மதியாலே" —திருப்புகழ்.

வளமையணி நீடு புஷ்ப சயன அணைமீதுருக்கி வனிதை:—

இறைவன்மீது காதல் கொண்ட ஆன்மா தனிமை என்ற மலரணைமீது உள்ளம் உருகித் தவிக்கின்ற நிலையை இந்த அடி கூறுகின்றது.

மடல் நாடி நித்தம் நலியாதே:—

மடல் என்பது, காதல் உற்றார், தாம் விரும்பிய பெண் மணியை யடையும்பொருட்டுத் தாம்கொண்ட காதல் உண் மைக் காதல் என்பதை ஊரவர்க்கு உணர்த்தும்பொருட்டு, பனைமடலால் குதிரைபோற் செய்து, அதன்மீது ஏறி காதலியின் திருவுருவத்தைத் துணியில் எழுதி கையில் பிடித்து நிற்பர்

ஆனால் பெண்கள் மடல் ஏறும் மரபு தமிழ் இனத் திற்கு இல்லை.

கடலன்ன காம முழந்தும் மடலேறாப்
பெண்மையிற் பெருந்தக்க தில்.
—திருக்குறள்.

வடநூல் மரபுக்கு அது உண்டு. இங்கே தெய்வத் தைக் காதலித்த பெண் மடலூர்தல் பொருந்தும்.

"........................மானோக்கின்
அன்னநடையார் அலர்ஏச ஆடவர்மேல்
மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனை யாம் தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்."
இயற்பா. பெரிய திருமடல்.

வெற்றி மலரணையில் நீ யணைக்க வரவேணும்:—

எனது எண்ணம் முற்றி வெற்றி பெறுமாறு தேவரீர் என்னைத் தழுவி நீர் வேறு நான் வேறுபடாத அத்துவித முத்தியின்பத்தைத் தரும்பொருட்டு வந்தருளவேண்டும்.

"இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்"

"நீவேறெனாதிருக்க நான்வே றெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர"
—திருப்புகழ்.

துளபமணிமார்ப:—

திருமாலுக்கு உவந்தது துளசி.
சிவம்—சூடு.
விஷ்ணு—குளிர்ச்சி.
சிவம்—அனல்.
விஷ்ணு—நீர்.

இதனால் சிவாலயத்தில் வெந்த நீறும், திருமால் கோயிலில் குளிர்ந்த நீரும் தருவார்கள்.

சூட்டைத் தணிப்பது வில்வம்.
குளிர்ச்சியைத் தவிர்ப்பது துளசி.

இதனால் சிவாலயத்தில் வில்வார்ச்சனையும், திருமால் கோயிலில் துளசி யர்ச்சனையும் நடைபெறுகின்றன என்ற ஒரு குறிப்பையும் உணர்க.

சுருதிமறை வேள்வி மிக்க மயிலை:—

சுருதி – வேதம்.

செவியால் கேட்டு வருவது வேதம்; அது எழுதாக் கிளவி; அதனால் சுருதி எனப்பட்டது.

மறை – அதில்வரும் மந்திரங்கள்;

நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப, —தொல்காப்பியம்.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். —திருக்குறள்.

திருமயிலாப்பூரில் வேத ஒலியும், மந்திர ஒலியும் வேள்விச் சடங்குகளும் நிறைந்திருக்கின்றன.

வேள்வி:—அந்தணர்கள் உலக நலன் பொருட்டு புரியும் தவமுடையது.

''தருவனத்துள் யானியற்றும் தவவேள்வி'' என்று விஸ்வாமித்திரர் கூறுவதாலும் அறிக.

இவ்வேள்விக்கு நாயகன் முருகன். வேள்வியில் சுப்ரமண்யோம் என்று முக்கால் மொழிவார்கள்.

'மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்''
—திருமுருகாற்றுப்படை.

''அந்தண்மறை வேள்வி காவற்கார''
—திருப்புகழ்.

அளகை வணிகோர்குலத்தில் வனிதையுயிர்மீளழைப்ப அருள்பரவு பாடல் சொற்ற குமரேசா:—

பூம்பாவை வரலாறு

திருமயிலாப்பூரில் வணிகர் திருமரபில் வந்தவர் **சிவநேசர்.**

தம்மை உள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
மெய்ம்மையே செயும் விருப்புடன் மிக்கதோர் அன்பால்
பொய்ம்மை நீக்கிய பொருளிது எனக்கொளும் உள்ளச்
செம்மையேபுரி மனத்தினர் சிவநேசர் என்பார்.

பெரும் பொருள் படைத்தவர். பல கப்பல்களுக்கு உரியவர். சிவபக்தியும் சீலமும் உடையவர். இவர் திருஞான சம்பந்தருடைய பெருமையைக் கேட்டு அவர் திருவடியில் அளவற்ற அன்பு கொண்டு இடையறாது அவரையே நினைந்தும் பேசியும் அவர் பெருமைகளைச் செவிமடுத்தும் பொழுது போக்கினர்.

மகவு இன்றி வருந்தினர். அறம் பல புரிந்தார். அவருடைய மனைவியாருடைய மணிவயிறு வாய்த்துப் பூமகளைப் போன்ற ஒரு புதல்வி தோன்றினள். வறியார்க்குப் பொன்னும் ஆடையும் அன்னமும் அளவின்றி யீந்து, மட்டற்ற மகிழ்ச்சியுற்றார். பூம்பாவை எனப் பேர் சூட்டினர்.

மின்னல்கொடிபோன்ற அப் பெண்மணி இனிது வளர்ந்து ஏழாண்டினையடைந்தாள்.

> சுற்றம் நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
> கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
> பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய நிதியும்
> முற்றும் என்னையுங் கொடுத்தனன் யான்என்று மொழிந்தார்.

உறவினர் யாவருங் கேட்க "திருஞானசம்பந்தருக்கு எனது மகளையும் செல்வம் யாவையும் என்னையுங் கொடுத்தேன்" என்று கூறினர். அவர் இருக்குந் திசை நோக்கித் தொழுதார்.

பூம்பாவை நந்தன வனத்தில் மலர் கொய்யும்போது அரவந் தீண்டியது. மருத்துவர் பலர் கூடி எத்துணையோ மருந்தும் மந்திரமும் கொண்டு முயன்றும், நலன் விளையாது பூம்பாவை உயிர் நீத்தனள்.

சிவநேசரும் திரு மனைவியாரும் பெருந்துயரக் கடலில் ஆழ்ந்தார்கள். அழுதார்; தொழுதார். புதல்வியின் பொன்னுடம்பை எரித்து சாம்பலுடன் எலும்பை ஒரு குடத்தில் வைத்து, அக் குடத்தை ஆடையாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்து. பஞ்சணையில் வைத்து தினந்தோறும் தூபம் தீபம் அன்னம் இவைகளை வைத்து உள்ளம் உலைந்து ஆறாத் துயருடன் இருந்தார். அவருடைய மன நிலையை அளக்கவல்லார் யார்?

ஐந்து ஆண்டுகள் அகன்றன. திருஞான சம்பந்தர் திருவொற்றியூருக்கு எழுந்தருளினர். சிவநேசரிடம் அச் செய்தியைச் சிலர் கூறினர்கள். சொன்னவர்க்கு சொன்னமும் துகிலும் தந்தார். பெருமகிழ்ச்சியுற்றார். திருமயிலாப்பூரிலிருந்து திருவொற்றியூர்வரை நடைப்பந்தர் இட்டார். மகர தோரணம் வாழை கமுகுகள் வைத்தார். மலர்மாலைகள் தொங்கவிட்டனர். அடியாருடன் சென்று பாலறாவாயு

ரைப் பன்முறை பணிந்தார். ஞானசம்பந்தரும் அவரைத் தொழுதார். திருமயிலைக்கு எழுந்தருளினுர். கபாலீச்சுரரை யும் கற்பகவல்லித் தாயையும் தொழுது துதிசெய்தார்.

திருஞானசம்பந்தர் சிவநேசருடைய புதல்வியின் மர ணத்தைத் திருவருளால் உணர்ந்து மகளின் என்பு நிறைந்த குடத்தைத் திருமதிற்புறங் கொணருமாறு பணித்தருளினுர். அவ்வண்ணமே தந்தையார் கொணர்ந்து கோயிலின் மேற் புற வாயிலில் வைத்தனர். அன்பர்களும் மாறுபட்ட சமண் சாக்கியர்களும் இதனை வியப்புடன் பார்த்து நின்ருர்கள்.

"உலகில் பிறந்தவர்கள் பெறுகின்ற பெரும்பயன், பிறைசூடிய பெருமானுடைய திருத்தொண்டர்கட்கு அமு தம் படைத்தலும், நம்பனுடைய நல்விழாக் காணுதலுமே யாகும் இது உண்மையானுல் இந்த எலும்பு பெண்ணுரு வம் பெற்று எழுக" என்று புகலியர்கோன் புகன்ருர்.

மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினு லவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

இவ்வாறு கூறி,

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்,

உரிஞ்சாய வாழ்க்கை அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ் சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்.

என்ற பதிகம் பாடினுர்.

உடனே பூம்பாவை பன்னிரு வயதுடையளாய்த் தாமரையிருந்த தையல் போன்று குடத்திலிருந்து உருப் பெற்று எழுந்தாள். இந்த அற்புதச் செயலைக் கண்டு அனை வரும் தொழுதார்கள், அரகரஎன்று ஆர்த்தார்கள். பரசமயத் தவர் தளர்ந்தார்கள். அழகே ஒரு உருப்பெற்றதுபோல் அப் பெண்மணி விளங்கினுள்.

எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணு நான்முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினுருண்டு பேர்பெறும் புகலிவேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தால் கண்டார்.

பல்லாண்டுகளை யுடைய பிரமதேவன் தான்படைத்த திலோத்தமையைக் கண்டு காமுற்று நான்முகங்களாலும் கண்டான். பதினுருண்டுடைய புண்ணிய வடிவான புகலிப்பிரான் திலோத்தமையைப் பார்க்கிலும் அழகு மிகுந்த பூம்பாவையின் அழகைக் காணுது, அவள்பால் விளைந்த கண்ணுதற் கடவுளின் கருணை வெள்ளத்தை ஆயிரம் முகங்களால் கண்டருளினுர்.

சிவம்பழுத்த சிரபுரத்துச் செல்வராம் சீகாழிப் பிள்ளையாரது செந்தாமரைப் பாதத்தில் சிவநேசர் வீழ்ந்தார். பூம்பாவை கபாலீச்சுரரைத் தொழுது, ஞானசம்பந்தரைத் தொழுதாள். அவளை உலகத்தார் தொழுதார்கள்.

சிவநேசர் பிள்ளையாரை மீளவும் பணிந்து "அடியேனுடைய கோடிக் கணக்கான செல்வத்துடன் இப் பெண் மணியைத் திருமணம் புரிந்தருள வேண்டும்" என்று வேண்டினுர்.

பெருகிய அருள்பெறும் வணிகர் பிள்ளையார்
மருவு தாமரையடி வணங்கிப் போற்றிநின்
றருமையால் அடியனேன் பெற்ற பாவையைத்
திருமணம் புரிந்தருள் செய்யும் என்றலும்,

திருஞானசம்பந்தர், "அன்பரே! நீர் பெற்றபெண் அரவால் இறந்தனள்; இவள் நான் பெற்ற பெண். ஆதலால் மணச் செயல் பொருந்ாது" என்று கூறி அருள்புரிந்தார்.

பின்னர் பூம்பாவை கன்னிமாடத்திருந்து தவத்தைச் செய்து சிவத்தைச் சேர்ந்தனள்.

கருத்துரை

திருமால் மருகரே! என்பை யுருவாக்கிய இளம் பூரணரே! என்னைத் தழுவி இன்னருள் புரிய வந்தருள்வீர்.

7

கடிய வேக மாருத விரத தூத ராபாதர்
கலக மேசெய் பாழ்மூடர் வினைவேடர்
கபட வீன ராகாத இயல்பு நாடி யேநீடு
கனவி கார மேபேசி நெறிபேணுக்
கொடிய னேது மோராது விரக சால மேமூடு
குடிலின் மேவி யேநாளு மடியாதே
குலவு தோகை மீதாறு முகமும் வேலு மீராறு
குவளை வாகும் நேர்காண வருவாயே
படியி னோடு மாமேரு அதிர வீசி யேசேட
பணமு மாட வேநீடு வரைசாடிப்
பரவை யாழி நீர்மோத நிருதர் மாள வானாடு
பதிய தாக வேலேவு மயில்வீரா
வடிவு லாவி யாகாச மிளிர்ப லாவி னீள்சோலை
வனச வாவி பூவோடை வயலோடே
மணிசெய் மாட மாமேடை சிகர மோடு வாகான
மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே.

பதவுரை

படியினோடு = பூமண்டலத்தினுடன், மா மேரு = பெரிய மேருமலையும், அதிர வீசி = அதிருமாறு வீசியும், சேட பணமும் ஆட = ஆதிசேடனுடைய பணுமகுடங்களும் அசையவும், நீடு வரை சாடி = நீண்ட கிரவுஞ்சமலையைப் பிளந்து, பரவை ஆழிநீர் மோத = பரந்த கடலின் நீர் அலைகள் மிகுந்து மோதவும், நிருதர் மாள = அரக்கர்கள் மாண்டு ஒழியவும், வான் நாடு பதியது ஆக = வான நாடு பண்டுபோல் தழைத்து வளம் பெறவும், வேல் ஏவும் = வேலாயுதத்தை விடுத்தருளிய. மயில வீரா = மயிலை வாகனமாக வுடைய வீரரே! வடிவு உலாவி ஆகாச மிளிர் = வடிவம் பரந்து

ஆகாசத்தில் உயர்ந்திருக்கின்ற, பலாவின் நீள் சோலை =பலா மரங்களுடைய சோலையும், வனச வாவி=தாமரைத் தடாகங்களும், பூவோடை = மலர் ஓடைகளும், வயலோடே=செந்நெல் விளைகின்ற கழனிகளும், மணிசெய் மாடம் = நவரத்தினங்கள் இழைத்த மாடமாளிகைகளும், மேடை=மேடைகளும், சிகரமோடு=கோபுரங்களும் நிறைந்து, வாகு ஆன = அழகு பொருந்திய, மயிலை மேவிவாழ் = திருமயிலாப்பூர் என்னும் திருத்தலத்தில் விரும்பி வாழ்கின்ற தேவர் பெருமாளே=தேவர்கட்கு எல்லாம் பெருமையின் மிக்கவரே! கடியவேகம் ஆருத = மூர்க்கத்தோடு கூடிய கோபம் ஒருபோதும் தணியாத, இரக சூதர் =நயவஞ்சனையுடையவரும், ஆபாதர் = தீயரும் கலகமே செய் பாழ்மூடர்= கலகத்தையே செய்யும் பாழான அறிவற்றவரும், வினைவேடர்= தீத்தொழில் புரியும் வேடரது குணமுடையவரும், கபட ஈனர் = வஞ்சகமுடைய கீழ்மக்களும் ஆகிய புலவர்களுடைய, ஆகாத இயல்பு நாடி, கூடா ஒழுக்கத்தை நல்லொழுக்கமாகக் கொண்டு, நீடு கன விகாரமே பேசி = மிகவும் பல வேறுவேறான வீண் வார்த்தைகளைப் பேசி, நெறிபேணு= நல்ல நெறியை விரும்பிச் செல்லாத, கொடியன் = கொடியவனாகிய அடியேன், ஏதும் ஓராது = ஒன்றையும் ஆராய்ந்து பார்க்காமல், விரகசாலமே மூடு=ஆசையாகிய வலையினால் மூடப்பட்ட, குடிலின் மேவி= உடம்பாகிய குடிசையின்கண் பொருந்தி, நாளும் மடியாதே= எந்நாளும் அழிந்துபோகாமல், குலவு தோகைமீது = விளங்குகின்ற மயிலின்மீது ஏறி, ஆறுமுகம் = ஆறு திருமுகங்களும், வேலும் = வேலாயுதமும், ஈராறு குவளை வாகும்=குவளை மாலையணிந்த பன்னிரு புயங்களும், நேர் காண = அடியேன் நேரில் கண்டு உய்யுமாறு, வருவாயே = வந்து அருள்புரிவீர்.

பொழிப்புரை

மண்ணுலகமும் பெரியமேருமலையும் அதிருமாறு வீசியும், ஆதிசேடனுடைய பணாமகுடங்களும் அசைந்து நடுங்கவும், நீண்ட கிரவுஞ்சமலையைப் பிளந்து, பரந்த கடலின் நீர் கொந்தளித்து மோதவும், அரக்கர்கள் மாண்டு அழியவும், தேவலோகஞ் செழித்து வளமையுறவும் வேற்

படையை விடுத்தருளிய மயில்வீரரே! ஆகாயம் வரை வளர்ந்து பரந்த வடிவத்துடன் விளங்குகின்ற பலாமரங்கள் நிறைந்த சோலைகளும், தாமரைத் தடாகங்களும், பூவோடைகளும் கழனிகளும், நவமணிகள் இழைத்த மாடமாளிகைகளும், பெரிய மேடைகளும், கோபுரங்களும் பொருந்தி அழகு செய்யும் திருமயிலை என்னும் திருத்தலத்தில் விரும்பி வாழ்கின்ற தேவர்கட்கெல்லாம் தலைவரே! தணியாத பெருங் கோபத்துடன் கூடிய நயவஞ்சகரும், தீயரும், கலகத்தையே செய்யும் அழிவையடைகின்ற மூடரும், தீமைகளைப் புரியும் கொடிய வேடரைப் போன்றவரும், வஞ்சனை மிகுந்த கொடியருமாகிய கீழ்மக்களுடைய தீக்குணங்களைக் கொண்டு, மிகவும் பலப்பல வீண்வார்த்தைகளைப் பேசி நல்ல நெறியை விரும்பாத கொடியவனாகிய அடியேன், ஒன்றும் ஆராய்ச்சியின்றி, ஆசையாகிய வலையினால் மூடப்பட்ட உடலாகிய குடிசையில் பொருந்தியிருந்து சதா அழிந்து போகாவண்ணம், தேவரீரது ஆறு திருமுகங்களும், வேலாயுதமும், குவளை மாலையணிந்த பன்னிரு புயாசலங்களும் அடியேன் கண்டு உய்வு பெற, விளங்குகின்ற மயிலின் மீது ஏறிக்கொண்டு வந்து அருள் புரிவீர்.

விரிவுரை

கடிய வேக மாருத:—

வேகம் என்பதுதான் நமக்குப் பலப்பல அல்லல்களைத் தருகின்றது. உள்ளத்தில் வேகம் வந்தபோது தக்கவை இவை, தகாதவை இவை என்றும், சொல்வன, தவிர்வன இவையென்றும் தோன்றாமல் மயங்கிக் கெடுவர். ஆதலினால் கோபத்தீ தணிதல் வேண்டும்.

"விடுங்கோள் வெகுளியை" என்றும், "ஆறுவது சினம்" என்றும், "சினமே யொழியாய்" என்றும் வரும் திருவாக்குகளைச் சிந்தித்து சினமாகிய வேகத்தைக் கெடுக்க வேண்டும்.

உள்ளத்தில் சினம் எழுகின்றபோது அறிவு நீங்கி பொறி புலன்களெல்லாம் மயங்கி, உடல் காந்தி, அமைதி குலைந்து நலமெலாம் அழியும், எத்துணைப் பெரிய தீங்கு நேரினும் காற்றுக்கசையாத இமாசலம்போல் சாந்த வீரர்

களாகத் திகழவேண்டும். உண்ணாது நோற்பாரினும் பிறர் கூறும் கடுஞ் சொல்லைப் பொறுக்கும் சாந்த சீலர் பெரியவர் என்பர் திருவள்ளுவர்.

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின்.

சாந்தத்தினால் மனத்தில் பெரும் இன்ப ஊற்று சுரக்கும். "பொறுமை கடலினும் பெரிது" என்பது பழமொழியன்றோ? இனி, கடிய வேகம் மாறாத என்றே கொண்டும் பொருள் செய்யலாம். அங்ஙனம் கொள்ளும்போது, கோபம் ஒரொருகால் வரினும் பின்னொரு சமயம் மாற வேண்டும். தீர்க்க கோபமுடையவனாக இருப்பவன் சண்டாளனாவான்.

நிற்க, வேகம் என்பதற்குக் கோபம் என்று மேலே பொருள் செய்யப்பட்டது. அன்றி விரைவு என்றும் பொருள் கொள்ளலாம், வேகத்திற்கு எல்லாம் கடுமையான வேகமுடையது மனம், வாயு வேகத்தினும் மனோ வேகமே மிக்கது. அம் மனோவேகத்தாலேயே எல்லா அநர்த்தங்களும் எய்துகின்றன. குலாலன் சக்கரம் "ஒரு கால் திரிகையில் ஆயிரக்கோடி சுற்றோடும்" இந்த மனம். இந்த வேகம் மாறியபோது பரம சாந்தி ஏற்படுகின்றது. எண்ணமுடியாத அளவில் மிகப் பெருங் கடிய வேகமுடைய இந்த மனோ வேகத்தை மணிவாசகனார்க்குத் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலிலே எம்பெருமான் கெடுத்து ஆண்டருளினார்.

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க"

இந்த வேகம் நின்றவுடன் பிறப்பு நின்றுவிடுகின்றது. அதனால் அதற்கு அடுத்தபடியாக,

"பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க"

என்று அருளிச்செய்தனர்.

இரத சூதர்:—

இரதம் - இனிமை, சூது - வஞ்சனை; இனிமையாகப் பேசி வஞ்சிப்பது; நயவஞ்சகம். சிலருக்கு வாய் கற்கண்டு;

உள்ளம் கத்திரிக்கோல். இவர்கள் விஷவாயுவைவிடப் பொல்லாதவர்கள்.

செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனம்
தங்குமொழி சந்தனசீ தம்போலும்-அங்கியெரி
கத்திரியைப் போலுமாங் காரிகையே வஞ்சர்மனம்
குத்திரர்பால் மூன்று குணம். —அருணாசலக் கவிராயர்.

வஞ்சகருக்கு முகம் - தாமரை
,, வாய் – சந்தனம்
,, மனம் - கத்திரிக்கோல்.

விரத சூதர்:— என்றே பொருள் கொள்ளலாம். அங்ஙனமாயின், தணியாத கொடுங் கோபத்தையே விரதமாக வுடைய வஞ்சகர் எனப் பொருள்படும். அல்லது, "விரதங்களை இடையில் விட்ட வஞ்சகர்" எனினும் அமையும்.

"சூழ்விரதங்கள் கடிந்த குண்டர்கள்" —திருப்புகழ்.

ஆபாதர்:—ஆபாசன் என்பதன் மரூஉ. ஆபாதன் – தீயன்.

கலகமே செய் பாழ்மூடர்:—

நன்றாக ஒற்றுமையுடன் வாழ்கின்ற குடும்பங்களை, இங்கும் அங்கும் புனைந்து பொய் மொழிகளைக் கூறிக் கலைத்து வம்புவளர்த்து அதனால் வயிறு பிழைப்பவர். ஊருக்குள்ளும் சிலர் ஒரு வேலையுமின்றி "இவன் உன்னை இவ்வாறு கூறினான்", "அவன் உன்னை இவ்வாறு அவமதித்து இகழ்ந்தான்" என்று ஆங்காங்கு சொல்லி, கட்சிப் பிரதி கட்சிகளை உண்டாக்கித் திரிவர்.

அண்டின பேரைக் கெடுப்போரும் ஒன்றுபத் தாமுடிந்து
குண்டுணி சொல்லுங் குடோரிகளுங் கொலையே நிதஞ்செய்
வண்டரைச் சேர்த்தின்ப சல்லாபம் பேசிடும் வஞ்சகரும்
சண்டிப் பயல்களுமே கலிகாலத்தில் தாட்டிகரே.

வினைவேடர்:—

வில்லையும், அம்பையும், கத்தியையும், வலையையும், தாங்கி சதா கொலையே புரிந்து உழலும் வேடரைப் போன்றவர், கருணையில்லாதவர் என்பது கருத்து. "கொலையேபுரி வேடர்" என்றார், அநுபூதியிலும்,

கபட வீனர்:—

கபடம் – வஞ்சனை. உள்ளும் புறமும் வேறுபட்டு வெளிக்கு நல்லவர்கள்போல் நடித்து தீங்கு செய்பவர். மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்ற முத்திநாதனைப்போல் என்று அறிக.

ஆகாத இயல்பு நாடி:—

"உலகிற்கு ஆகாத தீமை புரியும் கீழ் மக்களாகிய அவர்களுடைய உறவைக் கொண்டு, அவர்களது குணங்களை மேற்கொண்டு அடியேனும் தீயனானேன்" என்று அடிகள் வருந்துகின்றனர்.

கன விகாரமே பேசி:—

நானாவகையான ஊர் வம்புகளைப் பேசி வாழ்நாளை வீழ்நாளாகச் செய்வது. நம்முடைய வாழ்நாளில்ஒவ்வொரு நிமிடமும் விலைமதிக்க முடியாத மாணிக்கமாகும். அதனை அவமே செலவழிக்கக்கூடாது. ஏனைய உயிர்களுக்குக் கண்ணுண்டு, காதுண்டு, காலுண்டு, மூக்குண்டு; குரங்கு, யானை, யாளி இவைகளுக்குக் கையுண்டு. ஆனால் பேசுவதற்கு அநுகூலமான வாயில்லை. அந்த வாய் உண்பதற்கு மட்டும் உடையதே யன்றி உரைப்பதற்கு உடைத்தன்று. கண்ணிந்திரியம் பார்ப்பதற்கு மட்டும் ஏற்பட்டது. மூக்கு உயிர்ப்பதற்கு மட்டும் ஏற்பட்டது. செவி கேட்பதற்கு மட்டும் ஏற்பட்டது. ஆனால், வாய் உண்பதற்கு மட்டும் ஏற்பட்டதன்று; உண்பதற்கும் உரைப்பதற்கும் ஏற்பட்டது. இரு தொழில் செய்கின்றது வாய்; உண்பதனால் கன்மேந்திரியமாகும்; உரைப்பதனால் ஞானேந்திரியமாகும். உண்பது வெறுந்தொழில்; உரைப்பது அறிவின் தொழில். உரைப்பது என்றால் சாமானியமானதன்று. அவனவன் அறிவுக்குத் தக்கவாறு அந்த சொற்கள் அமைகின்றன. இப்படி வேறு உயிர்களுக்கு அமையப்பெறாத உரைப்பதற்கு ஏற்றதாகிய வாக்கிந்திரியத்தை இறைவன் நமக்குத் தந்தனன். அந்த வாக்கினால் இறைவன் புகழை ஓத வேண்டும்.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து"

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்''

என்ற திருவாக்குகளை உய்த்துணர்மின். அன்றியும் வாக்கினால் பிறருக்குபகாரமான சொற்களைச் சொல்ல வேண்டும். நீதி நெறிகளை எடுத்துக் கூறவேண்டும். இனிய சொற்களைச் சொல்லவேண்டும். அச் சொற்கள் தேனும் பாலும் போலும் தித்திக்க வேண்டும்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'' —திருவள்ளுவர்.

இதனை மறந்து, ''வெடுவெடு'' என்று கடுமொழிகளையும். சதா பிறரைப்பற்றி பழிமொழிகளையும், பிறர் குறைகளையும், ஊர்ப் பொது இடங்களில் வேலையில்லாத வீணர்களுடன் இருந்து ஊர் வம்புரைகளையும் சதா பேசிப் பொழுது கழிப்பவர்களின் அறியாமை யிருந்தவாறு என்னே! என்னே! அவர்கள் மனிதருக்குள் பதர்கள் ஆவார்கள். ஏனெனில் உள்ளீடு இன்மையினால்.

''பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். —திருவள்ளுவர்.

பயனில் சொல் பேசுவார்க்கு இம்மை மறுமை இரு நலன்களும் அழிந்துவிடுகின்றன. உலகத்தாராலும் வெறுக்கப் படுவர். ஆதலினால் எப்போதும் பயனுடைய சொற்களைப் பேசி, வாழ்நாளை புனிதமாகச் செய்து, இம்மையில் புகழும், மறுமையில் புண்ணியமும் பெறுவார்களாக. அன்பர்கள் இதனை நன்கு கவனித்து நலம் பெறுக.

நெறிபேணாக் கொடியன்:—

நெறி – வழி. வழியின் தன்மையே குறித்த இடம் சேர்ப்பிப்பது. நெறியாவது ''பொறி வாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி'' யாகும் என்பர் வள்ளுவனார். அந்நெறியை, சிவநெறி யென்றும், நன்னெறி யென்றும், அற நெறி யென்றும் ஆன்றோர் கூறுவர்.

''திருநெறிய தமிழ்'' என்பார் ஞானசம்பந்தர். ''குறியைக் குறியாது குறித்தறியும் நெறி'' என்பார் அருணகிரி நாதர். அந்த நெறி யறியாதவரை மூடர் என்பர் மணிவாசகர். ''முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை''.

பக்குவப்பட்ட ஆன்மாக்களை புன்னெறி புகவொட்டாது தடுத்து, நன்னெறியின்பாலுய்த்து, ஞானக் காட்சியை நல்கி அடிமை கொண்டு இறைவன் ஆட்கொள்வன்.

> "புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலா
> நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
> என்னையு மடிய ருக்கி இருவினை நீக்கி யாண்ட
> பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி"
>
> —*கச்சியப்ப சிவாசாரியார்.*

ஏதுமோராது:—

ஓர்தல்—ஆராய்தல். ஒவ்வொரு மனிதனும் முதலாவதாகத் தன்னைப்பற்றி ஆராய வேண்டும். "நான் யார்? உடம்பே உயிரா? உயிர் உடம்புக்குள் எங்ஙனம் உறைகின்றது? உயிர் இவ்வுடம்பை எடுக்குமுன் எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது? உடம்பு தானே கிடைத்ததா? அல்லது உடம்பு வேறு ஒருவரால் தரப்பட்டதா? அப்படி வேறு ஒருவர் தந்திருப்பாராறுல் அவர் யார்? அவர் தன் கருத்தின் படி தந்தாரா? என் வினையின் காரணமாகத் தந்தாரா? உடம்பை ஏன் தந்தார்? இந்த உடம்பினுலாய பயன் யாது? உடம்புக்குள் எத்தனைக் கருவிகள் உள? உடம்பு நீங்கிய பின் இவ்வுயிர் என்ன ஆகின்றது? இவ்வுயிர்க்கு எத்தனை சரீரம்? என்னென்ன சரீரம்? அந்தச் சரீரங்களின் தன்மைகள் யாவை? பிறவிக்குக் காரணம் எது? எதனுல் பிறப்பு நீங்கும்? இவ்வாறு ஆராய்ந்து, ஆராய்ந்த அறிஞர்களிடம் அறிந்து ஆவியீடேறுதற்குரிய நலன்களையடையவேண்டும்.

விரக சாலமே மூடு குடில்:—

விரகம் – காமநோய்; சாலம் - வலை. காமநோயின் வலையால் மூடப்பெற்ற உடம்பாகிய வீடு. பலப்பல பிறவியையும், ஒழியாத துன்பத்தையும் தருவது இந்நோய். உயிரோடு உறைவது. அதனை இறைவன் திருவருளாகிய மருந்தினுல் விரைந்து விலக்குதல் வேண்டும்.

நாளு மடியாதே:—

"இறைவனே! துட்டர்களோடு கூடி மையல் நோயினுல் வருந்தி எந்நாளும் அடியேன் மாளக்கூடாது" என்று அடிகள் வேண்டுகின்றனர். உலகிலுள்ள மாந்தர்களது

தன்மைகளைக் கண்டு வருந்துகின்ற ஆன்றோர்கள், அத் தன்மைகளைத் தமது தன்மைபோல் கூறி இறைவனிடம் முறையிடுவது அருளாளர்களது மரபு. "குலம்பொல்லேன் குணம் பொல்லேன் குறியும் பொல்லேன்", "பொய்ம் மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்" என்பனவாதி திருவாக்குகளெல்லாம் அந்த நிலையில் எழுந்தன எனக் கொள்க. அங்ஙனமின்றி திருவருட் செல்வர்கள் கூறும் வசைகள் அத்தனையும் அவர்கள் மீது ஏற்றி அவர்கள் புரிந்ததாகக் கொள்வது தவறு.

குவளை வாகு:—

குவளை என்பது ஒருவகை நீர்ப்பூ. அது முருகப் பெருமானுக்கு உகந்த மலர். வாகு-புயம். குவளை மலரால் தொடுத்த மாலையை யணிந்த புயங்கள். இம் மலர் மாலையின் சிறப்பை அருட்பிரகாச வள்ளலார் கூறுமாறு காண்க.

அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிசிவ கனியைச் சேரக் கருதுகிலேன்
திவலையொழிக்கும் திருத்தணிகைத் திருமால்மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை யெடுக்காமல் கொழுதத வுடலை யெடுத்தேனே.

ஐந்தாவது அடியும், ஆறாவது அடியும் முருகப் பெருமான் சூரபன்மன் மீதும் கிரவுஞ்ச மலைமீதும் வேல் ஏவிய திறத்தை விளக்குகின்றன.

ஏழாவது அடியும், எட்டாவது அடியும் சென்னையைச் சார்ந்த திருமயிலாப்பூர் என்னுந் திருத்தலத்தின் வளப்பத்தையும் மகிமையையும் வியந்து கூறுகின்றன. உமாதேவியார் மயில் வடிவாக இருந்து சிவபெருமானைப் பூசித்தபடியால் இத் தலம் மயிலை எனப் பெயர் பெற்றது. மிக அழகிய கோயில். திருஞானசம்பந்தப் பெருமான் என்பைப் பெண்ணாக்கிய அற்புதத் திருத்தலம்,

கருத்துரை

வேலாயுதத்தையுடைய மயில்வீரரே! திருமயிலையில் எழுந்தருளிய பெருமானே! சிற்றினஞ் சேர்ந்து கேடுற்று அடியேன் அழியாவண்ணம் தேவரீர் தரிசனந் தந்து ஆட்கொள்வீர்.

8

திரைவார் கடல்சூழ்புவி தனிலே உலகோரொடு
திரிவே னுனையோதுதல் திகழாமே
தீனநா ளுமுனேதுதி மனதா ரபினேசிவ
சுதனே திரிதேவர்கள் தலைவாமால்
வரைமா துமையாள்தரு மணியே குகனேயென
அறையா வடியேனுமு னடியாராய்
வழிபா டுறுவாரொடு அருளா தரமாயிடு
மகநா ளுளதோசொல அருள்வாயே
இறைவா ரணதேவனு மிமையோ ரவரேவரு
மிழிவா கிமுனேயிய லிலராகி
இருளா மனதேயுற அசுரே சர்களேமிக
இடரே செயவேயவ ரிடர்தீர
மறமா வயிலேகொடு வுடலே யிருகூறெழ
மதமா மிகுசூரனை மடிவாக
வதையே செயுமாவலி யுடையா யழகாகிய
*மயிலா புரி*மேவிய பெருமாளே.

பதவுரை

இறை = தேவர்களுக்குத் தலைவனான, வாரண தேவனும் = வெள்ளையானை மேல் வருகின்ற இந்திரனும், இமையோர் அவர் ஏவரும் = ஏனைய தேவர்கள் யாவரும், இழிவு ஆகி = இழிந்த நிலையை யடைந்து, முனே இயல் இலர் ஆகி = முன்னாளில் வெல்லுந் தகுதியில்லாதவர்களாகி, இருள் ஆம் மனதே உற = இருண்ட மனத்தையுடைவராகித் துன்பமுற, அசுர ஈசர்கள் (ஏ — அசை) = அசுரத் தலைவர்கள், மிக இடரே செயவே = மிகுந்த துன்பங்களைச் செய்தபோது, அவர் இடர் தீர = அத் தேவர்களின் துன்பம் நீங்குமாறு, மற மா அயிலே கொடு = வீரமும் பெருமையும் உடைய

வேலாயுதத்தைக் கொண்டு, உடலே இரு கூறு எழ = உடம்பு இரண்டு பங்காகுமாறு, மத மாமிகு சூரனை மடிவு ஆக = ஆணவத்தால் மாமரமாகி நின்ற சூரபன்மன் தருக்கொழிந்து அழியுமாறு, வதையே செய்யும் = வதை செய்த, மாவலி உடையாய் = பேராற்றல் உடையவரே! அழகு ஆகிய மயிலாபுரி மேவிய = அழகு வாய்ந்துள்ள திருமயிலாப்பூரில் வீற்றிருக்கின்ற, பெருமாளே = பெருமையின் மிகுந்தவரே! திரை அலைகளுடன் கூடிய, வார் கடல் சூழ் = நீண்ட கடல் சூழ்ந்த, புவிதனிலே = பூமியிலே, உனை ஓதுதல் திகழாமே உலகோரொடு திரிவேன் = தேவரீரை ஓதிப் புகழாது வீணே உலகத்தாரோடு திரிகின்றேன்; தினம் நாளும் = நாள் தோறும், முனே துதி மனது ஆர = முன்னதாகத் துதிக்கும் மனதில் நிறைவுபெற்று, பினே = பின்னர், சிவ சுதனே = சிவ குமாரா! திரி தேவர்கள் தலைவா = மும்மூர்த்திகளின் தலைவனே! மால் வரை மாது உமையாள் தரு மணியே = பெருமை பொருந்திய மலை மங்கையாகிய உமாதேவியார் தந்த மாணிக்க மணியே, குகனே = குகமூர்த்தியே, என அறையா அடியேனும் = என்று உரைத்து அடியேனும், உன் அடியாராய் = உமது அடியவர்களாகி, வழிபாடு உறுவாரொடு = வழிபாடு செய்பவர்களோடு, அருள் ஆதர மாயிடும் = அருள் அன்புக்கு உரியவனாகின்ற, மக நாள் உளதோ = அந்த பெரிய நாள் ஒன்று உண்டாகுமோ? சொல அருள்வாயே = அதனைச் சொல்ல அடியேனுக்கு அருள் புரிவீர்.

பொழிப்புரை

ஐராவதமீது வருந் தலைவனாகிய தேவேந்திரனும் ஏனைய தேவர்கள் யாவரும் இழிவுற்று முன்னுளில் தகுதியிலராகி இருண்ட மனத்தை யடைய, அசுரத்தலைவர்கள் மிகுந்த துன்பத்தைச் செய்தபோது, அத்தேவர்களின் துன்பந் தீரும் பொருட்டு, வீரமும் பெருமையும் பொருந்திய வேலாயுதத்தைக் கொண்டு ஆணவத்துடன் மாமரமாகி நின்ற சூரன் இரு கூருகி அழியுமாறு வதை செய்த பேராற்றல் படைத்தவரே! அழகிய திருமயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள பெருமிதம் உடையவரே! அலைகளையுடைய நீண்ட கடல் சூழ்ந்த பூதலத்தில் தேவரீரைத் துதி செய்யாது உலகத்தாரோடு

திரிகின்றேனாகிய அடியேன், இனியாவது நாள்தோறும், முன்னதாகத் துதி செய்து மனதில் நிறைவு பெற்று, அப் படிப் பெற்றபின்னர்; சிவகுமரா! மும்மூர்த்திகளின் தலைவா! பெருமையுடைய இமயவல்லியானபார்வதிபெற்ற மாணிக்க மணியே! குகக் கடவுளே! என்று கூறி அடியேனும் உமது அடியவர்களாய் வழிபாடு செய்யும் உத்தமர்களுடன் கூடி அருளன்புக்கு உரியவனாகும் ஒரு சிறந்த நாள் எனக்கு உண்டாகுமோ? இதனைச் சொல்ல அருள் புரிவீர்,

விரிவுரை

திரைவார் கடல் சூழ்புவி:—

அலைகளுடன் கூடிய கடலால் சூழ்ந்தது இந்தப் பூமி. இதனால் நாம் அறியவேண்டியது யாது? நிலத்தை விட நீர் மூன்று மடங்கு அதிகம். நிலத்தைச் சுற்றி நீண்ட பெருங்கடல் சூழ்ந்துளது. என்றாவது ஒருநாள் கடல் பொங்கும். இப்பூமி நீர்க்குள் மூழ்கி அழிந்து மறையும். ஆகவே நிலம் நிலையாமையுடையது. நிலவாழ்வும் நிலை பேறுடையதன்று. இந்த நினைவு வரும்பொருட்டே ஆன்றோர்கள் அடிக்கடி கடல் சூழ்ந்த வுலகம் என்று குறிப்பிடுவாராயினர்கள்.

"ஆழி சூழுலக மெல்லாம்"

என்று கம்பரும்,

"நீடாழி யுலகத்து"

என்று வரந்தருவாரும்,

"திரை சூழ்புவி"

என்று மற்றொரு திருப்புகழில் அருணகிரிநாதரும் கூறுவதைக் காண்க.

உலகோரொடு திரிவே னுனையோதுதல் திகழாமே:—

மனிதர்கள் உய்யவேண்டுமாயின் இறைவனைத் துதி செய்யவேண்டும்.

இறைவனை ஓதிப் பணியாதார் நன்றிகொன்ற பாவத்தினால் நரகடைவர்.

"நீதகல ஒதிப் பணியாரும்
நீநரக மீதில் திகழ்வாரே" —திருப்புகழ்.

இங்ஙனம் இறைவன் தந்த வாக்கினால் அப்பரமனைத் துதியாது உலகத்தில் அவமே பட்டிமாடாகத் திரிகின்ற மாந்தர் பலர்.

தினநாளு முனே துதி மனதார:—

முன் கூறியபடித் திரியாமல் இனியாவது, நாளும் நாளும் முதல் வேலையாக முருகவேளைத் துதி செய்ய வேண்டும். அவ்வாறு துதித்தால் மனதில் நினைவு உண்டாகும். ஆர்—நிறை; மனது ஆர—மனதில் நிறைவு உண்டாக.

சிவசுதனே:—

எல்லாவுலகங்கட்கும் அருள் புரியும்பொருட்டு சிவமூர்த்தியே குழந்தை யுருவாக வந்தருளினார்.

திரி தேவர்கள் தலைவா:—

திரி தேவர்கள்—மும்மூர்த்திகள். ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் முறையே புரிய மும்மூர்த்திகளைப் படைத்து முத்தொழிலை நல்கி அம்மூவர்க்கும் வரும் இடையூறுகளைப் போக்கி முருகவேள் அருள் புரிகின்றனர்.

"படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துந் தம்பயந் தவிர்த்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா"

"படைத்தளித் தழிக்குந் த்ரிமூர்த்திகள் தம்பிரானே"

"அரனரிப் பிரமர்கள் முதல் வழிபடப் பிரியமும் வர
அவரவர்க்கொரு பொருள்புகல் பெரியோனே"
—திருப்புகழ்.

இனி தத்தம் தொழில் காரணம் அங்கும் இங்கும் திரிகின்ற தேவர்கள் எனினும் பொருந்தும்.

குகனே:—

மலைக்குகையில் இருப்பவன்; உயிர்களின் இதய குகையில் இருப்பவன்.

'அணோரணீயான் மஹதோ மஹியாநாத்மா குஹாயசம்'
—தைத்திரீயாருண சாகை

அடியாராய் வழிபாடுறுவாரொடு அருளாதரமாயீடு மகநாளுளதோ:—

திருவருள் பெறுவதற்கு மிகவும் சுலபமான நெறி அடியாருறவு என அறிக.

"தொண்டர் குழாம் சாரிற் கதியன்றி வேறில்லை"
" அன்பால் கெடுதலிலாத் தொண்டரிற் கூட்டியவா"
—கந்தரலங்காரம்.

"தொண்டரொடு கூட்டு கண்டாய்" —தாயுமானர்.

"அடியார் உறவும் அரன்பூசை நேசமும் அன்பு மன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ' —பட்டினத்தார்.

இறைவாரண தேவன்:—

வாரணம்—யானை, வெள்ளை யானையாகிய ஐராவத வாகனனாகிய இந்திரன்.

இந்திராதி இமையவரை சூரபன்மன் மிகக் கீழ்நிலையில் அடக்கி அலக்கண் புரிந்தான். 108 யுகங்கள் வானவர்கள் சூரனால் வருந்தினார்கள். இனி நமக்கும் உய்வு உண்டோ என்று கருதி ஏங்கினார்கள். அதனால் அவர்கள் மனம் இருண்டேவிட்டது.

அந்த மன இருளை அகற்ற முருகன் ஜோதிப்பிழம்பாய் உதித்து, ஆணவமலமாகிய சூரனைப் பிளந்து, அவன் வலியை அழித்து தேவர்கள் யாவரையும் பண்டுபோல் வாழ வைத்தருளினார்.

கருத்துரை

மயிலை மேவிய மாதேவா! அடியருடன் கலந்து அருள்பெற அருள்வாய்.

9

நிரைதரு மணியணி யார்ந்த பூரித
ம்ருகமத களபகில் சாந்து சேரிய
இளமுலை யுரமிசை தோய்ந்து மாமல ரணைமீதே

நெகிழ்தர அரைதுகில் வீழ்ந்து மாமதி
முகம்வெயர் வேழவிழி பாய்ந்து வார்குழை
யொடுபொர இருகர மேந்து நீள்வளை யொலிகூர

விரைமலர் செறிகுழல் சாய்ந்து நூபுர
மிசைதர இலவிதழ் மோந்து வாயமு
தியல்பொடு பருகிய வாஞ்சை யேதக வியனுடும்

வினையனை இருவினை யீண்டு மாழ்கட
லிடர்படு சுழியிடை தாழ்ந்து போமதி
யிருகதி பெறஅருள் சேர்ந்து வாழ்வது
மொருநாளே

பரையபி நவைசிவை சாம்ப வீயுமை
யகிலமு மருளரு ளேய்ந்த கோமளி
பயிரவி திரிபுரை யாய்ந்த நூல்மறை சதகோடி

பகவதி யிருசுட ரேந்து காரணி
மலைமகள் கவுரிவி தார்ந்த மோகினி
படர்சடை யவனிட நீங்கு ருதவள் தருகோவே

குரைகடல் மறுகிட மூண்ட சூரர்கள்
அணிகெட நெடுவரை சாய்ந்து தூளெழ
முடுகிய மயில்மிசை யூர்ந்து வேல்விடு
முருகோனே

குலநறை மலரளி சூழ்ந்து லாவிய
மயிலையி லுறைதரு சேந்த சேவக
குகசர வணபவ வாய்ந்த தேவர்கள் பெருமாளே.

பதவுரை

பரை = பராசக்தியும், அபிநவை = புதுமையுடையவளும், சிவை = சிவ சக்தியும், சாம்பவீ = சம்புவுடன் கூடியவளும், உமை = உமாதேவியும், அகிலமும் அருள் = உலகங்களை யெல்லாம் ஈன்ற, அருள் ஏய்ந்த கோமளி = திருவருள் மயமான அழகியும், பயிரவி = பைரவராம் சிவனது பத்தினியும், திரிபுரை = மூவுலகமுமானவளும், சதகோடி மறை நூல் ஆய்ந்த பகவதி = நூறுகோடி வேதநூல்களை ஆராய்ந்த ஆறு குணங்களையுடையவளும், இரு சுடர் ஏந்து காரணி = சூரியனும் சந்திரனும் தமது இடையில் தரிக்கின்ற மூலப் பொருளும், மலைமகள் = இமவானுடைய புதல்வியும், கவுரி = பொன் னிறம் படைத்தவளும், விது ஆர்ந்த மோகினி = சந்திர ஒளி நிறைந்த அழகியும், படர் சடை அவன் இடம் நீங்குறுதவள் = விரிந்த சடையுடைய சிவபிரானுடைய இடப்பாகத்தில் நீங்காது வீற்றிருப்பவளுமாகிய அம்பிகை, தரு கோவே = ஈன்ற தலைவரே! குரைகடல் மறுகிட = ஒலிக்கின்ற சமுத்திரமானது கலங்கவும், மூண்ட சூரர்கள் அணிகெட = பொங்கி எழுந்து வந்த சூரர்களின் படைவகுப்பு அழியவும், நெடுவரை சாய்ந்து தூள் எழ = நீண்ட கிரவுஞ்சமலை வீழ்ந்து பொடிபடவும், முடுகியமயில்மிசைஊர்ந்து = வேகமாகச் செல்லும் மயிலின்மீது ஆரோகணித்து, வேல் விடும் = வேலாயுதத்தை விடுத்தருளிய, முருகோனே = முருகக் கடவுளே! குல நறை மலர் = சிறந்த தேனையுடைய மலர்களில், அளி சூழ்ந்து உலாவிய = வண்டுகள் மொய்த்து உலாவுகின்ற, மயிலையில் உறை தரு = திருமயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள, சேந்த = செம்மைப் பண்புடையவரே! சேவக = ஆற்றல் நிறைந்த வீரரே! குக = குகை யில் வசிப்பவரே! சரவணபவ = சரவணப் பொய்கையில் உதித்த வரே! வாய்ந்த தேவர்கள் = பொருந்திய தேவர்கள் போற்றும், பெருமாளே = பெருமையில் மிகுந்தவரே! நிரை தரு மணி அணி ஆர்ந்த = வரிசையாக அமைந்த மணிமாலைகள் நிறைந்ததும், பூரித = பூரித்து இருப்பதும், ம்ருகமத = கஸ்தூரி, களப = கலவை, அகில் = அகிற் சாந்து, சாந்து சேரிய = சந்தனம் இவைகள்சேர்ந் துள்ளதுமான, இளமுலை உரம்மிசை தோய்ந்து = இளந் தனங்க ளுள்ள மார்பில் அணைந்தும், மாமலர் அணைமீதே = நல்ல மலர்ப்

படுக்கையின்மேல், அரைதுகில் நெகிழ்தர = இடையில் உள்ள ஆடை அவிழ, வீழ்ந்து = விழுந்தும், மாமதி முகம் வெயர்வு எழ = நல்ல சந்திரனை யொத்த முகத்தில் வேர்வை உண்டாகவும், விழி வார் குழையொடு பாய்ந்து பொர = கண்கள் நீண்ட தோடுகளில் பாய்ந்து போர் செய்யவும், இரு கரம் ஏந்து நீள் வளை ஒலிகூர = இரண்டு கரங்களில் அணிந்துள்ள வளைகள் மிகவும் ஒலிக்கவும், விரைமலர் செறிகுழல் சாய்ந்து = நறுமணம் உள்ள பூக்கள் நிறைந்த கூந்தல் சரியவும், நூபுரம் இசைதர = காலில் உள்ள சிலம்பு ஒலிக்கவும், மோந்து இலவு இதழ்வாய் அமுது இயல் பொடு பருகிய = உச்சியை மோந்து இலவமலர் போன்ற வாயூறலை முறையே பருகும், வாஞ்சையே தகவு இயல் நாடும் = விருப்பத்தையே தக்க ஒழுக்கமாக நாடுகின்ற, வினையனை = செயலை யுடைய அடியேனை, இருவினை ஈண்டும் = இருவினையைப் பெருக்கும், ஆழ்கடல் இடர்படு சுழிஇடை தாழ்ந்துபோம் மதி = ஆழமான கடல்போன்ற துக்கம் நிறைந்த பெருஞ் சுழியிடை அழுந்திப் போகின்ற என் அறிவானது, இரு கதி பெற = பெருமை வாய்ந்த பரகதியைப் பெற்று உய்யுமாறு, அருள் சேர்ந்து வாழ் வதும் = உமது திருவருளைச் சேர்ந்து இன்புற்று வாழ்வதான, ஒரு நாளே = ஒரு நாள் உண்டாகுமோ?

பொழிப்புரை

பராசக்தியும், புதியவளும், சிவ சக்தியும், சுகத்தைச் செய்யும் சக்தியும், உமாதேவியும், எல்லாவுலகங்களையும் ஈன்ற திருவருள் மயமான அழகியும், பைரவருடைய சக்தியும், மூன்று உலகங்களுமானவளும், நூறுகோடி வேத சாத்திரங்களை ஆராய்ந்தவளும், ஆறு குணங்களையுடைய வளும், சூரிய சந்திரர்கள் தரிக்கின்ற மூலப் பொருளும், இமய குமாரியும், பொன்னிறம் படைத்தவளும், சந்திர வொளி நிறைந்தவளும், அழகியும், விரிந்த சடையுடைய சிவமூர்த்தியின் இடப்பாகத்தில் விலகாது வீற்றிருப் பவளும் ஆகிய அம்பிகை பெற்ற தலைவரே! ஒலிக் கின்ற சமுத்திரம் கலங்கவும் கோபித்து வந்த சூரர்களின் சேனைகள் அழியவும், நீண்ட கிரவுஞ்ச மலை பொடியாகி விழவும் வேகமான மயில் மீது ஏறி வேலாயுதத்தை

விடுத்தருளிய முருகப் பெருமானே! சிறந்த தேன் துளிக்கின்ற மலர்களில் மொய்த்து வண்டுகள் உலாவுகின்ற திருமயிலாப்பூரில் வாழ்கின்ற செம்பொருளே! வீரமூர்த்தியே! குகையில் வசிப்பவரே! சரவணப் பொய்கையில் உதித்தவரே! நற்குணம் பொருந்திய தேவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே! வரிசையாக மணிமாலைகள் நிறைந்ததும் பூரித்திருப்பதும் கஸ்தூரி கலவை அகில் சந்தனம் முதலிய வாசனைப் பொருள்கள் சேர்ந்ததுமான இளந் தனத்துடன் கூடிய பொதுமகளிரின் மார்பைத் தழுவியும், மலர்ப் படுக்கைமீது உடை தளருமாறு வீழ்ந்தும், நல்ல சந்திரனைப் போன்ற முகத்தில் வேர்வை யுண்டாகவும் காதுகளில் உள்ள குழைகள் மீது பாய்ந்து கண்கள் போர் புரியவும் இரண்டு கரங்களில் உள்ள வளையல் மிகுதியாக ஒலிக்கவும் வாசனை மலர் நிறைந்த கூந்தல் சரியவும் பாதத்தில் உள்ள சிலம்பு இனிது ஒலிக்கவும் உச்சியை மோந்தும், இலவ மலர் போன்ற சிவந்த இதழ்களில் ஊறும் அமுதத்தை முறையே பருகியும் இத்தகைய ஆசைச் செயலை நாடுகின்ற அடியேனுடைய இருவினைகளைப் பெருக்கும் ஆழ்கடல் போன்ற துக்கச் சுழலில் அழுந்துகின்ற அறிவானது உயர்ந்த பரகதியைப் பெற்று திருவருள் சேர்ந்து வாழ்கின்ற நாள் ஒன்று எனக்கு உளதாகுமோ?

விரிவுரை

பரை:—

பரா என்ற சொல் தமிழில் ஆகார ஈறு இன்மையால் ஐகார ஈறு பெற்று பரை என வந்தது. பரா—பெரிய சக்தி.

அபிநவை:—

அபிநவம்—புதுமை,

புதுமைக்கும் புதுமையானவள் அம்பிகை.

சிவை:—

சிவம்—மங்கலம்; நித்யமங்களமானவள்.

சாம்பவி:—

சம்பு—சுக காரணன்; சுகத்துக்குக் காரணனை சிவனுடன் கூடியவள்.

உமை:—

உமா என்ற சொல் உமையென வந்தது.

அ உ ம என்ற மூன்றும் ஒன்றுபட்டது பிரணவம்.

அ—சிருஷ்டிக்கும்.
உ—இரட்சிக்கும்.
ம—சங்கரிக்கும்.

சிருட்டி உயிர்களுக்கு தனு கரண புவன போகங்களைத் தருதல்.

இரட்சகம் அவைகளைக் காத்தல்.

சங்காரம் அவைகளை ஒடுக்கி இளைப்பாற்றுதல்.

இந்தத் தொழிலில் இடைப்பட்டது காத்தல். காத்தல் தொழிலைப் புரியும் உகரம் முன்னுக வேனைய இரண்டு எழுத்தும் பின்னுக அமையுமானால் உ ம அ உமா எனவரும்.

அகிலமும் அருளருளேய்ந்த கோமளி:—

எல்லா வுலகங்களையும் ஈன்ற அருள்சக்தியான அழகுத் தெய்வம் அம்மை.

"அகிலாண்ட கோடி யீன்ற அன்னையே" —தாயுமானுர்.

பயிரவி:—

சிவபெருமான் பயிரவ மூர்த்தியாக எழுந்தருளிய போது, அம்பிகை பயிரவியாக நின்றுள்.

திரிபுரை:—

மூன்று உலகங்களுமாக அம்பிகை விளங்குகின்றுள். அதனுல் அவளுக்கு உலகம்மை என்ற பேர் உண்டாயிற்று.

"சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே" —தாயுமானுர்.

ஆய்ந்த நூன்மறை சதகோடி:—

நூறு கோடி வேத நூல்களில் உள்ள மந்திரங்களை யெல்லாம் ஆய்ந்த மகாமந்திர சொருபிணி அம்பிகை.

"நாதவடிவாகிய மஹாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்ட வெளியே" —தாயுமானூர்.

பகவதி:—

ஆறு குணங்களையுடையவள் பகவதி. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்களையுடைய தேவியின் பெருமைகளைக் கூறுகின்ற தேவி பாகவதம் என்ற நூலாலும் அறிக.

இருசுடர் ஏந்து காரணி:—

"பானுமண்டல மத்யஸ்தா
சந்திர மண்டல மத்யகா" —லலிதா சகஸ்ர நாமங்கள்.

'இரவு பகல் சூழும் சுடர்க்கு' —அபிராமியந்தாதி.

அன்றியும் சூரியனையும் சந்திரனையும் கண்களாக வுடையவள் எனவும் கூறலாம்.

கவுரி:—

கௌரம்— பொன், பொன்னிறம் படைத்தவள் கௌரி.

விதார்ந்த மோகினி:—

விது ஆர்ந்த மோகினி; விது - சந்திரன், சந்திரவொளி மயமானதாய்.

"பலகோடி வெண்மதி போலவே வருவாயே"
—திருப்புகழ்.

மயில் மிசை யூர்ந்து வேல்விடு முருகோனே:—

சூரனைச் சங்கரிக்கும்போது இந்திரன் மயிலாக இருந்து முருகனைத் தாங்கினன். ஆகவே சூரன் மயிலாக வரு முன்னரே முருகன் மயிலின் மீது ஊர்ந்து போரிட்டனன் என்று கூறுகின்றார்.

குலநறை மலரளி சூழ்ந்துலாவிய மயிலை:—

தேன் துளிக்கின்ற மலர்ச் சோலைகள் சூழ்ந்த பெரு வளமுள்ள திருப்பதி திருமயிலாப்பூர்; எப்போதும் வண்டுகள் கானமிடுகின்றன.

அன்பர்கள் முக்தியின்பமான தேனை நாடி வந்து அமுதமயமான தோத்திரகானம் புரிகின்றார்கள் என்பது குறிப்பு.

சேந்த:—

சேந்தன் — செம்மைப்பண்புடையவன்.

'கையோ அயிலோ கழலோ முழுதும்
செய்யோய் மயிலேறிய சேவகனே.'

—அநுபூதி.

முருகனுடைய நாமங்களில் சேந்தன் என்ற ஒரு நாமமும் சிறந்தது.

சேந்தன் என்ற பெயரை முன்னாளில் பலர் பொன்னே போற் போற்றியிட்டனர். சேந்தன் திவாகரம் என்ற நூலாலும், சேந்தனார் என்ற ஒரு ஞானியார் இருந்தார் என்பதனாலும் அறிக.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனை"

என்கின்றார் கந்தரலங்காரத்தில் அருணகிரிநாதர்.

சேவகன்:—

சிறந்த வீரன் ஆதலின் சேவகன் என்றார்.

"வளைகடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத முழுச் சேவகனே"

என்கின்றார் திருவகுப்பில்.

காலால் மூவுலகங்களையும் அளந்த நாராயணர் காற் சேவகர்.

அரையில் உமையையுடைய உருத்திரர் அரைச்சேவகர்.

முருகர் முழுச் சேவகர்.

கருத்துரை.

உமைபாலரே! மயிலை மேவிய சரவணபவா! மாதர் மயக்குறாது சிவகதி பெற அருள்வீர்.

10

வருமயி லொத்தவ ரீவார் மாமுக
மதியென வைத்தவர் தாவா காமிகள்
வரிசையின் முற்றிய வர்கா ராமியல் மடமாதர்

மயிலினி லுற்றவர் மோகா வாரிதி
யதனிடை புக்கவ ராளாய் நீணிதி
தருவிய லுத்தர்கள் மாடா மாமதி மிகஅழிவேனோ

தருபர வுத்தம வேளே சீருறை
அறுமுக நற்றவ லீலா கூருடை
அயிலுறை கைத்தல சீலா பூரண பரயோக

சரவண வெற்றிவி நோதா மாமணி
தருமர வைக்கடி நீதா வாமணி
மயிலுறை வித்தவு ஞதா ராமணி பெறுவேனே

திரிரிரி தித்திதி தீதீ தீதிதி
தொகுதொகு தொத்தோகு தோதோ தோதிகு
திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி தொதிதீதோ

தெனவரி மத்தள மீதார் தேமுழ
திடுவென மிக்கியல் வேதா வேதொழு
திருநட மிட்டவர் காதே முடிய குருபோதம்

உரைசெயு முத்தம வீரா நாரணி
உமையவ ளுத்தர பூர்வா காரணி
உறுஜக ரக்ஷணி நீரா வாரணி தருசேயே

உயர்வர முற்றிய கோவே யாரண
மறைமுடி வித்தக தேவே காரண
ஒருமயி லப்பதி வாழ்வேதேவர்கள் பெருமாளே.

பதவுரை

தருபர உத்தம = திருவருளைத் தரும் மேலான உத்தமனே! வேளே = உபகாரியே! சீர்உறை அறுமுக = சிறப்பு வாய்ந்த ஆறுமுகக் கடவுளே! நல் தவ லீலா = நல்ல தவத்துடன் விளையாடுகின்றவரே! கூர்உடை அயில் உறை கைதல = கூர்மை யுடைய வேற்படை உறைகின்ற கரதலத்தினரே! சீலா = சிறந்த நற்பண்பினரே! பூரண = எங்கும் நிறைந்தவரே! பரயோக = மேலான யோகமூர்த்தியே! சரவண = சரவணப் பொய்கையில் வந்தவரே! வெற்றி விநோதா = வெற்றியில் பொழுது போக்குபவரே! மாமணி தரும் = சிறந்த மணியைத் தருகின்ற, அரவை கடி நீதா ஆம் = பாம்பை அடக்குகின்ற நீதி யுடையதான, அணி மயில் உறை வித்த = அழகிய மயில்மீது வீற்றிருக்கும் ஞான மூர்த்தியே! திரிரிரிரி தித்திதி தீதீதீதிதி தொகுதொகு தொத்தொகு தோதோ தோதிகு திமிதிமி தித்திமி ஜேஜே தீதிமி தொதிதீதோ தென = திரிரிரிரி தித்திதி......தென என்று, அரி மத்தளம் மீது ஆர் தேம் = திருமால் மத்தளத்தை மிகுதியாக வாசிக்கும் இடத்தில், முழ திடு என = முழவு என்று வாத்தியத்தை திடுதிடு என வாசிக்கவும், மிக்க இயல் வேதாவே தொழும் = மிகுந்த தகுதியுடைய பிரமதேவர் தொழவும், திருநடம் இட்டவர் = அழகிய நடனஞ் செய்கின்ற சிவபெருமானுடைய, காதே மூடிய = செவிகளைப் பொத்திய, குருபோதம் உரை செயும் உத்தம = குருவின் மூலம் கேட்கக்கூடிய ஞானப் பொருளை உபதேசித்த உத்தமரே! வீரா = வீரமூர்த்தியே! நாரணி = குளிர்ச்சியுடையவளும், உமையவள் = உமாதேவியும், உத்தர பூர்வா காரணி = வடக்கு கிழக்கு முதலிய திசைகளின் மூல தேவதையும், உறு ஜக ரட்சணி = உலகத்துக்கு உற்ற காத்தற்கடவுளும், நீர் ஆவாரணி = மறைக்குஞ் சத்தியும் ஆகிய அம்பிகை, தருசேயே = பெற்ற குழந்தையே! உயர்வர முற்றிய கோவே = உயர்ந்த வரங்களைத் தருந் தலைவரே! ஆரண மறைமுடி வித்தக = வேத உபநிடத முடிவில் விளங்கும் ஞானமூர்த்தியே! தேவே ஒளிப்பொருளே! காரண = மூலப்பொருளே! ஒரு மயிலைபதி வாழ்வே = ஒப்பற்ற மயிலாப்பூரில் வாழ்கின்றவரே! தேவர்கள் பெருமாளே = தேவர்கள் போற்றும் பெருமையின் மிகுந்தவரே! வருமயில் ஒத்தவர் = அசைந்து

வரும் மயில் போன்றவரும், ஈவார் மாமுகம் வைத்தவர் = பணங் கொடுப்பவர்முன் தமது அழகிய முகத்தைச் சந்திரனைப்போல் குளிர்ச்சியாக வைத்துக்கொள்பவரும், தாவா காமிகள் = குறை யாத ஆசையினரும், வரிசையின் முற்றிய வாகு ஆர் ஆம் இயல் மட மாதர் = ஒழுங்கில் முதிர்ச்சியுற்ற அழகு நிரம்பிய தன்மை யுடைய மெல்லிய விலைமாதர்களுடைய, மயலினில் உற்று = மயக் கத்தில் அகப்பட்டு, அவர் மோகாவாரிதி அதன் இடை புக்கு = அவர்மீது வைத்துள்ள மோகமாகிய கடலில் புகுந்து, அவர் ஆளாய் = அவருடைய ஆளுகைக்கு அடங்கி, நீள்நிதி = செல்வத் தையும் தந்து, தரு இயல் லுத்தர்கள் மாடா = மரம் போன்றவரும் லோபிகளும் ஆகிய அம் மாதர்களினிடம், மா மதி மிக மூழ்கி = நல்ல புத்தியானதும் மிகுதியாக முழுகிக் கிடக்கும் அடியேன், உன் ஆதாராம் அணி பெறுவேனோ = தேவரீருடைய பற்றுக் கோடாகிய பெருமையைப் பெறக்கடவேனோ?

பொழிப்புரை

திருவருளைத் தருகின்ற மேலான உத்தமரே! உபகரிக் கின்றவரே! சிறப்பு வாய்ந்த ஆறுமுகக் கடவுளே! நல்ல தவத்தில் விளையாடுகின்றவரே! கூர்மையான வேலா யுதத்தை ஏந்திய கையினரே! நல்ல பண்புடையவரே! எங் கும் நிறைந்தவரே! உயர்ந்த யோகநாதரே! சரவணப் பொய்கையில் வந்தவரே! வெற்றியைப் பொழுது போக் காக வுடையவரே! உயர்ந்த மாணிக்கமணியைத் தருகின்ற பாம்பை அடக்குகின்ற நீதியை யுடைய அழகிய மயில் மீது வீற்றிருக்கும் ஞான மூர்த்தியே! திரிரிரி தித்திதி தீதீ திதிதி, தொகுதொகு தொத்தொகு தோதோ தோதிகு திமிதிமி தித்திமி ஜேஜே திதிமி தொதிதீதோ தென என்ற ஒலியுடன் திருமால் மத்தளம் நன்கு கொட்டவும், முழவு முழங்கவும், மிகுந்த தகுதியுடைய பிரமதேவர் தொழவும் அழகிய ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராசப் பெருமா னுடைய திருச்செவி நிரம்புமாறு குருமுகமாக வரும் ஞான மொழியை உபதேசித்த உத்தமரே! வீரமூர்த்தியே! குளிர்ந்த தன்மை யுடையவரும், உமாதேவியும், வடக்கு கிழக்கு முதலிய திசைகளின் வடிவான மூலப் பொருளும், உல கத்தைக் காப்பவரும் மறைக்குஞ் சக்தியானவருமாகிய

அம்பிகை பெற்ற திருக்குமாரரே! உயர்ந்த வரங்களை வழங்கும் தலைவரே! வேத உபநிடத முடிவில் விளங்கும் ஞான மூர்த்தியே! ஒளிப்பொருளே! காரியங்கள் அனைத்துக்குங் காரணம் ஆனவரே! திருமயிலைமாநகரில் வாழ்கின்ற தேவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே! மயில்போன்ற வரும், பணங் கொடுப்பவர்களைக் கண்டால் தங்கள் முகத்தைச் சந்திரனைப்போல் குளிர்ச்சியாக வைத்துக்கொள்பவரும், குறையாத ஆசையுடையவர்களும், ஒழுங்காக முதிர்ந்த அழகு நிறைந்தவர்களுமான விலைமாதர்களின் மயக்கத்தில் அழுந்தி, அவர்மீது கொண்ட மோகமாகிய கடலில் முழுகி பொருளையும் தந்து அவர்க்கு அடிமையாகி மரம் போன்ற அம் மகளிராய உலோபிகள் மாட்டு நல்ல அறிவைப் பறிகொடுக்கும் அடியேன், தேவரீரைப் பற்றுக் கோடாகக் கொள்ளும் பெருமையைப் பெறுவேனோ?

விரிவுரை

வருமயி லொத்தவர்:—

மயில் நல்ல ஒயிலாக வரும்; தோகை பளபளவென்ற சாயலுடன் இருக்கும். இனிது ஆடல்புரியும். அதுபோன்று விலைமகளிரும் சாயலும் ஆடலும் உடையவர்கள்.

ஈவார் மாமுக மதியென வைத்தவர்:—

நிரம்பப் பணந் தருபவர் வரின் தங்கள் முகத்தைக் குளிர்ந்த சந்திரனைப்போல் அமைத்து இன்னுரை கூறி மேலும் மேலும் உபசரித்து பொருள் முழுவதும் பறிக்குந் திறலுடையவர்கள். பணந் தராதவர்களைக் கண்டால் முகம் சூரியனைப்போல் மாறிவிடும்.

தாவா காமிகள்:—

தவாத என்ற சொல் தாவா என நீண்டு வந்தது.

தவாத—தவறாத.

"தவாஅப் பிறப்பீனும் வித்து"

—திருக்குறள்.

வரிசையின் முற்றிய:—

வரிசை – அழகு. அழகு முதிர்ந்தவர்.

வாகா ராமியல் மடமாதர்:—

வாகு ஆர் ஆம் இயல் எனப் பதச் சேதஞ் செய்க.

வாகு – அழகு. ஆர் – நிரம்புதல்.

தருவிய லுத்தர்கள் மாடா:—

மரம் போன்றவர்கள்; லோபிகள்.

ஒருவனை வையும்போது அடே மரமே என்பார்கள்.

"மரமனையா னுக்கிந்த மானை வகுத்த" —ஔவை.

லுத்தர் – லோபிகள்.

பொது மகளிர் தம்பால் உள்ள பொருளை அறவழியில் செலவழியாது வைத்திருப்பர்.

மாடு – பக்கம். மாடா – மகளிர் பக்கமாகி.

தருபர உத்தம வேளே:—

அடியார்க்கு எல்லாவற்றையும் தருகின்ற மேலான உத்தம உபகாரி முருகன்.

"மொழியு மடியார்கள் கோடி
குறை கருதி னாலும் வேறு
முனிய அறியாத தேவர் பெருமானே"

"யார் வேண்டினாலுங் கேட்ட பொருளீயுந்
தியாகாங்க சீலம் போற்றி"

"வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறுதுதவு பெருமானே"

"வேண்டு மடியர் புலவர் வேண்ட அரிய பொருளை
வேண்டு மளவி லுதவும் பெருமானே"

"வேலெடுத்த சமர்த்தை யுரைப்பவர்
ஏவருக்கு மனத்தில் நினைப்பவை யருள்வோனே"

மாமணிதரு மரவைக்கடி நீதாவாமணி மயிலுறை வித்தக:—

உயர்ந்தகுல நாகப்பாம்பு நெடுநாள் வாழும் இயல்புடையது. அது ஒருவரையும் கடிக்காமல் வாழுமாயின் அதன் நஞ்சு மாணிக்க மணியாகத் திரண்டுவிடும்.

நீத ஆம் அணி மயில்:—

நீதி தங்கிய அழகிய மயில்.

வித்த:—

வித்தம் - ஞானம்.

"வித்தமிலா நாயேற்கு"

—திருஅருட்பா.

முருகன் ஞானந்தானுருவாகிய நாயகன். "ஞானாகர சுர பாஸ்கரன்"; "ஞான தாதா" "ஞானபண்டிதசுவாமி."

உனுதா ராமணி பெறுவேனே:—

உன் ஆதாரம் அணி. உன்னை ஆதாரமாகக் கொள்ளுகின்ற பெருமை.

ஆதரம் – அன்பு எனக் கொண்டு உனது அன்பு ஆகிய எனினும் அமையும்.

அரி மத்தளம்:—

சிவபெருமான் திருநடனம் புரிகின்றபோது திருநந்திதேவர் மத்தளம் வாசிப்பதே யன்றி நாராயணரும் மத்தளம் வாசிப்பர்; பிரமா தாளம் போடுவார்.

"வரத்தின் அருள்பெற்ற மத்தள மாயோன்
கரத்தின் நனிபொத்திக் களிப்ப"

—ஆனந்த ருத்ரேசர் வண்டுவிடு தூது.

திருநடமிட்டவர் காதே மூடிய:—

உபதேச மொழியால் சிவபெருமானுடைய செவியை முருகர் நிரப்பினர். காதை மடக்கி உபதேசங் கேட்பதும் மரபு.

உத்தர பூர்வாகாரணி:—

திசைகளைத் தாங்குகின்ற அம்பிகை திசைகளை ஆடையாக உடுத்திருக்கின்றாள். அதனால் திகம்பரி எனப் பட்டனள்.

உத்தரம் - வடக்கு; பூர்வம் – கிழக்கு.

உத்தர பூர்வ ஆகார அணி எனப் பிரித்து வடக்கு கிழக்கு என்ற திசைகளை (ஆகாரம்) உருவமாகக் கொண்ட ஜகம் எனினும் பொருந்தும்

நீராவாரணி:—

ஆவரணம்—மறைப்புச் சக்தி. நீர்—நீர்மை; குணம், ஆன்மாக்களுக்கு சிவசக்தி பக்குவம்வரும்வரை மறைப்புச் சக்தியாக நின்று உதவுவள், அதற்குத் திரோதான சக்தி என்று பேர்.

உயர் வர முற்றிய கோவே:—

அடியவர்கட்கு உயர்ந்த வரங்களை வழங்கும் வரத மூர்த்தி முருகக்கடவுள்.

"சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்"
—கந்தபுராணம்.

ஆரண மறை முடி வித்தக:—

வேதத்திற்கு ஆரணம் என்று ஒரு பேருண்டு. சில பகுதிகள் ஆரண்யத்தில் வைத்து ஓதும் தன்மைகளை யுடையதனால் ஆரணம் எனப்பட்டது.

மறை – உபநிடதம். வேத உபநிடத முடிவில் விளங்கும் பரம்பொருள் முருகவேள் என உணர்க.

"ஊனு நான்மறை முடிவாய் நிறைவது" —திருப்புகழ்.

கருத்துரை

சிவகுருவே! பார்வதி பாலா! உனது பற்றைப் பற்ற அருள்புரிவீர்.

ஸ்ரீ கபாலீச்சுரர் தேவஸ்தான வெளியீடுகள்

1	திருமயிலைத் தல புராணம் ...	0	50
2	பூம்பாவைத் திருப்பதிக உரை ...	0	12
3	திருமயிலைக் கபாலீச்சுர ஸ்ரீ கற்பகாம்பாள் மூவர்ண படம்	0	50
4	,, (தகரம், $\frac{3}{4}$ சட்டம் போட்டது)	2	25
5	,, ,, $\frac{1}{2}$,,	1	87
6	,, (அட்டை, $\frac{1}{2}$,,	1	50
7	திருவிழாவின் தத்துவ விளக்கம்	0	10
8	காரைக்கால் அம்மையார் வரலாறு	0	10